விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 சித்திரை 27 செவ்வாய்க்கிழமை (10.05.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 142

ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

## மட்டக்களப்பு சந்திவெளிப் பகுதித் தாக்குதலைக் கண்டித்து

# யாழில் இன்று பூரண ஹர்த்தால்

மட்டக்களப்பு சந்திவெளிப்பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பட்ட காவலரணை அகற்றக் கோரி மேற்கொள்ளப்பட்ட மறியற் போராட்டத்தின்போது தமிழ்மக்கள்மீது இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலைக் கண்டித்து வடக்குக் கிழக்கில் தமிழர் தாயகப் பகுதியெங்கும் இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

**யாழ்ப்பாணம்**

இன்று யாழ். குடாநாட்டில் பூரண ஹர்த்தாலுக்கான ஏற்பாட்டினை தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் மேற்கொண்டுள்ளது.

வர்த்தக நிலையங்கள், அரச, அரசசார்பற்ற நிறுவனங்கள், பாடசாலைகள் என்பவற்றை மூடி வாகனப் போக்குவரத்துக்கள் அனைத்தையும் முழுமையாக நிறுத்தி தமிழ்மக்களின் ஒற்றுமையின் பலத்தையும், இராணுவ அடக்குமுறைக்கு எதிராகத் தமிழர்கள் கிளர்ந்தெழுந்து ஆக்கிரமிப்புப் படைகளை ஓடஓட அடித்து விரட்டுவார்கள் என்ற உண்மையினை உணர்த்தவும் ஒன்றிணைந்து செயற்படுமாறு தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் வீதிகளில் ரயர்கள் போட்டு எரிப்பதைத் தவிர்க்குமாறும், அவசர நோயாளர் வாகனச் சேவைகளைத் தடுப்பதைத் தவிர்க்குமாறும் கேட்கப்பட்டுள்ளது.

**மட்டக்களப்பு**

இத் தாக்குதலைக் கண்டித்து மட்டக்களப்பிலும் இன்று பூரண

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மட்டக்களப்பில் இராணுவம் வெறியாட்டம்

# மறியலில் ஈடுபட்ட மக்கள் மீது தாக்குதல்!

## ஒருவர் பலி; 25 பேர் படுகாயம்; நகரமெங்கும் பரபரப்பு



(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு வாழைச்சேனை சந்திவெளியில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவச் சோதனைச் சாவடியை அகற்றுமாறுகோரி அப்பகுதி மக்கள் மறியல் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தவேளை, இராணுவத்தினர் திடீரென மேற்கொண்ட தடியடி, துப்பாக்கிப் பிரயோகத் தாக்குதலினால் ஒருவர் ஸ்தலத்தில் உயிரிழந்தார். இருபது பேருக்கும் அதிகமானோர் படுகாயமடைந்தனர்.

நேற்றைய இச்சம்பவத்தினால் மட்டக்களப்புப் பகுதியெங்கும் பெரும்பரபரப்பும் அச்சநிலையும் காணப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கருணாரட்ணவுக்கு இடமாற்றம்

## சந்திவெளித் தாக்குதல் சம்பவத்திற்கு

## இந்திய வெளிவிவகார அமைச்சர் அடுத்த மாதம் இலங்கை வருகிறார்

## கருணாரட்ணவுக்கு இடமாற்றம்

(கொழும்பு)

சமாதான செயலகத்தின் நடவடிக்கை அத்தியட்சகராகப் பணியாற்றிவந்த மேஜர் சரத் கருணாரட்ண உடனடியாக அமுலுக்கு வரும்வகையில் இராணுவத் தலைமை யகத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள் ளார்.

இதேவேளை அவரின் இடத்திற்கு பிரி கேடியர் தீபா லல்விஸ் நியமிக்கப்பட்டுள் ளார். சாதாரண இராணுவ இடமாற்றங்க ளுக்கு அமையவே இது இடம்பெற்றிருப்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## விபத்தில் மரணம்

அரியாலை மாம்பழச் சந்தியில் நேற்று மாலை 3.15 மணியளவில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் குடும்பஸ் தர் ஒருவர் பலியானார்.

நேற்றுமாலை யாழிலிருந்து முகமாலை நோக்கிச்சென்ற பஸ்ஸிலிருந்து மாம்பழச் சந்தியில் வீதியைக் கடக்கமுயன்றவேளை முகமாலையிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி

(12 ஆம் பக்கம் பார்க்க)

# சந்திவெளித் தாக்குதல் சம்பவத்திற்கு விடுதலைப் புலிகள் கடும் கண்டனம்

மட்டக்களப்பு சந்திவெளித் தாக்குதல் சம்பவத்திற்கு விடுதலைப் புலிகள் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளனர். அது குறித்து அவர்கள் அறிக்கை ஒன்றை வெளி யிட்டுள்ளனர்.

மட்டக்களப்பு வாழைச்சேனை பிரதான வீதியில் அமைந்துள்ள சந்திவெளி பாட சாலைக்கு அருகில் மக்களின் இயல்பு வாழ்க்கையைக் குலைக்கும் வகையில் இராணுவத்தினரால் புதிதாக அமைக்கப் பட்ட காவலரணை அகற்றக்கோரி நேற்று காலை 8.30 மணியளவில் இரண்டாயிரத் திற்கும் அதிகமான மக்கள் அமைதிவழி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளு மன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்த மூர்த்தி, பி.அரியநேந்திரன், ரி.கனகசபை மற்றும் தங்கேஸ்வரி ஆகியோரும் இவ் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டனர்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

# மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கவே சந்திவெளிமுகாம் அமைக்கப்பட்டது

**பிரிகேடியர் தயாரட்நாயக்க**

(கொழும்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை சந்தி வெளிப்பகுதியில் நேற்றைய தினம் நடை பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் படை யினர் மீது தாக்குதல் நடத்திய பின்னரே, படையினர் [illegible] இராணுவப் பேச்சாளர் தயாரட்நாயக்க தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட சோதனைச் சாவடியானது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், கருணா குழுவினருக்கும் ஏற்படும் மோதல்களிலி ருந்து மக்களைக் காப்பாற்றவே அமைக் கப்பட்டது அதனை அகற்றுமாறுகோரி மக் கள் [illegible]

(12 ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய வெளிவிவகார அமைச்சர் அடுத்த மாதம் இலங்கை வருகிறார்

இந்தியாவின் வெளிவிவகார அமைச் சர் நட்வர்சிங் அடுத்தமாதம் 9 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இரண்டுநாள் விஜயம் மேற்கொண்டு இலங்கைவரவுள்ள இவர் அரசுத் தலை வர்களுடன் முக்கிய பேச்சுக்களில் ஈடு படுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

காங்கிரஸ் அரசு மத்தியில் ஆட்சிப் பொறுப்பை ஏற்றபின்னர் வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங் கடந்த மார்ச் மாதம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள் – இராணுவம் திருமலையில் சந்திப்பு

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழீழ விடுத லைப் புலிகளுக்கும், இராணுவத்தினருக் கும் இடையில் சந்திப்பொன்று நேற்று நடைபெற்றது. யுத்தநிறுத்தக் கண்காணிப் புக்குழுவின் அலுவலகத்தில் நேற்று முற் பகல் ஒருமணிக்கு இச்சந்திப்பு இடம் பெற்றது.

(12 ஆம் பக்கம் பார்க்க)


EXPOAIR
your friend in the skies...



யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/8888
கொழும்பில் - 011 2372952/3, வெள்ளவத்தையில் - 011 2360290/91
Email- jaffna@expoavi.com, reservations@expoavi.com

எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...




நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# நாட்டைக் கட்டியெழுப்பும் விடயத்தில்

# அரசில் அங்கம் வகிக்கும் அனைத்துக் கட்சிகளும் ஐக்கியத்தோடு செயற்பட உறுதிபூண்டுள்ளன

## – ஜனாதிபதி தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டைக் கட்டியெழுப்பும் விட யததில் ஐக்கிய மக்கள் சுதந்திரக்



கூடடமைப்பு அரசாங்கத்தில் அங்கம் வகிககும் சகல கட்சிகளும் ஐக்கி யத்தோடு செயற்பட உறுதிபூண்டி ருப்பதாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

கூட்டமைப்பில் அங்கம் வகிக் கும் ஒன்பது கட்சிகளினதும் இணக் கப்பாட்டோடு கைச்சாத்திடப்பட்டு உருவாக்கப்பட்ட கூட்டமைப்பு அர சாங்கத்தை வீழ்த்த நடவடிக்கை எடுக்கப் போவதில்லையென்று அரசில் அங்கம் வகிக்கும் சகல கட்சிகளின் உறுப்பினர்களும் உறுதி யளித்துள்ளதாக ஜனாதிபதி கூறி யுள்ளார்.

எனவே, அரசின் நடவடிக்கை களில், எதிர்க்கட்சி உட்பட எவரும் தலையிடமுடியாது. இது கூட்டமைப்பு அரசாங்கத்தின் பலத்தையே எடுத் துக்காட்டுகின்றது.

அநுராதபுரம் பகுதியில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில்,

கடந்த காலங்களில் பொருட் களின் விலை அதிகரித்தமையை ஏற் றுக்கொண்ட அவர், இவ்வாறு விலை அதிகரிப்புக்கு பல்வேறு விடயங் கள காரணமாக அமைந்துள்ளன.

பிரதானமாக உலக சந்தையில் எண்ணெயின் விலை அதிகரிப்பு இலங்கையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் கடற்பரப்பை அண்மித்துள்ள பகுதிகளில் எண் ணெய் மற்றும் வாயு வளங்கள் உள்ளதாகத் தகவல்கள் கிடைத் துள்ளன. இது தொடர்பான ஆய்வு கள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆய்வின் முடிவுகளை இரண்டு மாதங்களுக்குள் தெரிந்து கொள்ள முடியும்.

அதேவேளை, மின்சார சபையை ஊழல் மிக்க நிறுவனமாக மாற்றிய மைக்க சகல அரசாங்கங்களும் பதில கூறவேண்டும். இதன் காரண மாக மின்சார சபைக்கு நாளாந்தம் 40 மில்லியனுக்கு மேல் நட்டமேற் படுகிறது எனவும் குறிப்பிட்டார். (ந-8)

## வலம்புரி ஜோன் திடீர் மரணம்

(சென்னை)

பிரபல எழுத்தாளரும், பேச்சாள ருமான வலம்புரி ஜோன் கடந்த சனிக்கிழமை நள்ளிரவு சென்னையில திடீரென காலமானார்.

சுமார் நூற்றுக்கணக்கான நாவல் களை எழுதிய இவர் பட்டிமன்றப் பேச்சாளராகவும் திகழ்ந்தார்.

அணமைக்காலமாக இந்தியத் தொலைக்காட்சிகளில் தோன்றி சிந்தனை விருந்து தரும் நிகழ்ச்சி களை நடத்தி வந்த இவர்,

கடந்த சில மாதங்களாக நீரி ழிவு நோயினால் சிரமப்பட்டு வந்த நிலையிலேயே திடீரென காலமாகி யுள்ளார். (க-7)

## சிவதொண்டன் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தினரால் மாதாந்தம் வெளியிடப்படும் "சிவதொண்டன்" மே மாத இதழ் அண்மையில் வெளி வந்துள்ளது. (க-2)

## சுனாமி புனர் நிர்மாணப் பணிகளுக்காக உதவி வழங்கிய

# அரச சார்பற்ற நிறுவனங்கள் தொடர்பான வேலைத்திட்டத்தை அமுல்படுத்த வேண்டும்

## அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர்

(கொழும்பு)

கடற்கோள் அனர்த்த புனர் நிர் மாணப்பணிகளுக்காக இலங்கைக்கு பெருமளவு வெளி நாட்டு உதவிகள் கிடைக்கப்பெற்றன. அவை பெரும் பாலும் அரசசார் பற்ற அமைப்பு கள் மூலம் கிடைக் கப்பெற்றுள்ள தால் அந்த அமை ப்புகள் தொடர் பான வேலைத் திட்டமொன்றை அமுல் செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளதாக வெளிநாட்டமைச் சர் லக்ஷ்மன்கதிர் காமர் தெரிவித் துள்ளார்.

இச் செயற்பாட்டினால் சர்வதேச அரசசார்பற்ற ஸ்தாபனங்கள் மூலம் மீள்கட்டமைப்பு மற்றும் புனர்வாழவு வேலைத் திட்டங்களுக்காக கிடைக் கப்பெற்ற பெருவாரியான தொகைப் பணததை பாதிக்கப்பட்ட மக்களின் நலனுக்காக சிறப்பான முறையில பயன்படுத்த முடியுமெனவும் அவர் கூறியுள்ளார்.

ஜெனிவாவில் நடைபெற்ற சர்வதேச அரசசார்பற்ற அமைப்புக்களின் கூட்ட மொன்றில்உரையாற்றும்போதே அமைச் சர் இவ்வாறு தெரிவித்தார்.


இத்தகைய வேலைத் திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப்படும் பட்சத்தில் வீடமைப்பு மற்றும் ஜீவ னோபாயத்தை ஆரம்பிப்பது போன்ற வற்றிற்கான உதவிகள் மற்றும் சிறு கடன்கள் போன்ற தேவைகளை பொறுப்போடு மேற்கொள்ள முடியு மென்றும் அமைச்சர் கதிர்காமர் கூறினார்.

இந்தக் கூட்டத்தில் பதின்மூன்று நாடுகளைச் சேர்ந்த அறுபத்தேழு அரசசார்பற்ற அமைப்புகளின் 90 ற்கு மேற்பட்ட பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

மேலும் அவர் உரையாற்றுகை யில, சுனாமி மீள்கட்டமைப்பு மற்றும் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் இந்த அமைப்புகள் இலங்கையர்களை அதிக எண்ணிக்கையில் சேவையில் ஈடுபடுத்தி உள்நாட்டில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்த வேண்டும் என வேண்டுகோள விடுத்தார்.

இத்தகைய செயற்பாடு பொருளா தார வளர்ச்சிக்கும் வறுமை ஒழிப் புக்கான அரசாங்கத்தின் நடவடிக் கைக்கும் துணையாக இருக்கு மெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, இலங்கை அர



சாங்கத்தின் செயற்பாட்டில் அரச சார்பற்ற அமைப்புகள் கூட்டாக பங்கெடுப்பதன் முக்கியத்துவத் தையும் அவர் வலியுறுத்தினார்.

இதனால உதவி தேவைப்படும் மக்களுக்கு நிவாரணம் கிடைக் கும் எனவும் இந்த அமைப்புகள் தம்மை இலங்கை அரசில் பதிவு செய்து கொண்டால் அவற்றைப் பொதுவான புனர்நிர்மாணத் திட்டங் களில் சேர்த்துக்கொள்ள முடியும் எனவும் லக்ஷ்மன் கதிர்காமர் மேலும் தெரிவித்தார். (க-7-5)

## இராசி பலன்

**10.05.2005**
**(சித்திரை 27 , செவ்வாய்க்கிழமை)**
**துதியை பிற்பகல் 3.31 மணிவரை**
**ரோகிணி முன்னிரவு 10.05 மணிவரை**
**இராகுகாலம் 2.54 - 4.24 மணிவரை**
**சுபநேரம் 10.24 - 11.54 மணிவரை**
**அமிர்தசித்தம்**

| | |
|---|---|
| மேடம் | கடின வார்த்தை, வேலைச்சுமை, முயற்சி தாமதம், பணவிரயம். |
| இடபம் | சிந்தனைமிகுதி, பெரியோர் சந்திப்பு, புதிய முயற்சி, போசன சுகம். |
| மிதுனம் | இடமாற்றம், காரிய அலைச்சல், சுபசெலவு, வீண்மனஸ்தாபம். |
| கடகம் | கீர்த்தி, களஸ்திரநன்மை, காரிய நன்மை, தனதானிய சேர்க்கை. |
| சிங்கம் | அதிகாரம், கௌரவமான நிலை, இஷ்ட சித்தி, ஆரோக்கியம். |
| கன்னி | எதிர்பாராத செலவு, உத்தியோக பங்கம், உடநலக்குறைவு, கட்டுப்பாடு. |
| துலாம் | வீண்பயம், பொருள் விரயம், சரீரபீடை, காரிய தடங்கல். |
| விருச்சிகம் | தேகநலன், கலந்துரையாடல், முயற்சி பலிதம், நல்லவரவேற்பு. |
| தனுசு | தடைப்பட்டகாரியம் கைகூடும், மனமகிழ்சி, பொருள் சேர்க்கை, நண்பர்கள் உதவி. |
| மகரம் | வியாபாரநன்மை, அஜீரணரோகம், மனக் கவலை, முயற்சி தாமதம். |
| கும்பம் | ரோகநிலை, மனப்பதற்றம், தனவிரயம், முயற்சி தாமதம். |
| மீனம் | இஷ்டசித்தி, மனோதைரியம், மாதர்நட்பு, தனலாபம். |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது

–வளவன்

## காணிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

(கொழும்பு)

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங் களில் வீடுகளை நிர்மாணிப்பதற்காக காணிகளைட் பெற்றுக் கொள்வதற்குத் தேவையான ஆரம்ப கட்ட நடவடிக்கை கள் மேறகொள்ளப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சு தெரிவிக்கின்றது.

முதல்கட்டமாக அரசினால் சுவீகரிப்பதற்கான காணிகள் அனைத்தும் தற்போது அடையாளம் காணப்பட்டுள்ளதாக நகர அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் ரி.தேவகே தெரிவித்துள்ளார். அரசாங்கத்திடமுள்ள, மதிப்பீடு செய்யப்பட்டுள்ள நிதிக்கு அமைய சுவீகரிக்கப்படவுள்ள அனைத்துக் காணிகளுக்கும் நட்ட ஈடுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காணிகள் சுவீகரிக்கப்படுவதற்கு முன னர் அரசு அவற்றின் உரிமையாளர்களுடன் கலந்துரை யாடவுள்ளது. அதன் பின்னர் அரசாங்கம், மதிப்பீடு செய் துள்ள நிதிக்கு அமைய குறிப்பிட்ட காணிகளைப் பெற்றுக் கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (க-9)

## பாதிப்புற்ற பிரதேசங்களில் சுற்றுலா நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்படும்

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் சுற்றுலா நடவடிக்கைகள் அபிவிருத்தி செய்யப்படும் என சுற்று லாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மதிப்பீடை உலக சுற்றுலா அமைப்பு மேற் கொளளும்என்றும்தெரிவிக்கப்படுகிறது. இதற்காக அந்த அமைப் பின் பிரதிநிதியொருவர் இலங்கை வந்துள்ளார் என்றும்,

ஒருவார காலம் நாட்டில் தங்கியிருக்கும் அவர், பாதிக்கப் பட்ட பகுதிகளின் விபரங்களை சேகரித்துக் கொள்வார் எனவும் கூறப்படுகிறது. அமைச்சின் மேலதிக செயலாளர் தகவல் தருகையில், அவரது அறிக்கையில் சுற்றுலா நடவடிக்கை களை மேம்படுத்துவதற்கான பரிந்துரைகளும் இடம் பெற்றிருக்கும் என்றும் தெிவித்தார். (க-5)

## மகா கும்பாபிஷேகம்

(பருத்தித்துறை)

புலோலி பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் சுவாமி தேவஸ்தான (பருத்தித்துறை சிவன் கோவில்) புனராவர்தனப் பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் பெரும் சாந்தி பெருவிழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 8.15 மணி முதல் 9 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் நடைபெறவுள்ளது.

முதல்நாள் வியாழக்கிழமை காலை 6.00 மணி முதல் அடியார்கள் எணணெய்க் காப்பு சாத்தலாம். (க-7-35)

## விவாத அரங்கு - 8

விடயம்

**நம்மவர்கள் வெளிநாடு சென்றதனால்**

**எமது கலாசாரம்:**

✧ சீரழிந்துள்ளது.

✧ சீர்பெற்றுள்ளது.

**நடுவர்: சிரேஷ்ட சட்டத்தரணி**

**திரு.சி.சிவநேசன்**

***உங்கள் வாதங்களை எழுதி அனுப்பி வையுங்கள்.***

அனுப்பவேண்டிய முகவரி :
விவாத அரங்கு, வலம்புரி,
இல.15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

## மாதம் ஒரு தடவை

# ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தை நடாத்துமாறு வேண்டுகோள்!

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி உதவி அரச அதிபர் பணிமனையில் நீண்டகாலமாக பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் கூட்டப்படவில்லை என இப்பகுதியில் உள்ள பொது அமைப்புகள் பலவும் குற்றம் சாட்டியுள்ளன.

வடமராட்சி கிழக்கின் அபிவிருத்தி பற்றி தனியே பிரதேச செயலரோ அல்லது ஒரு சில கிராம அலுவலர்களோ முடிவு எடுக்க முடியாது.

இப்பிரதேசத்தின் அபிவிருத்தி பற்றி பரந்துபட்ட அமைப்புகளின் ஆலோசனைக்கு ஏறபவே செயற்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படவேண்டும் எனவும் கேட்கப்பட்டுள்ளது.

மேலும் முன்னர் இப்பிரதேசத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் மாதத்தில் ஒரு தடவை நடத்தப்பட்டது போல் தொடர்ந்தும் நடத்தப்பட வேண்டும் எனவும் இதற்கான அழுத்தத்தை பிரதேச செயலருக்கு அரச அதிபர் ஊடாக வழங்குமாறும் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினாகளடம் கோரிக்கை விடப்பட்டுள்ளது. (ந-43)

# நாகர்கோவில் பாதையை பாவனைக்குத் திறந்துவிடுக!

## நாகர் கோவில் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதிக்கு மகஜர்

(திருநெல்வேலி)

படையினரின் உயர் பாதுகாப்பு வலயத்தினுள் உள்ளடக்கப்பட்டுள்ள நாகர் கோவில் பாதையை மக்கள் போக்குவரத்திற்குத் திறந்தவிடவேண்டுமென நாகர் கோவில் பொது அமைப்புக்களின் ஒன்றியம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுவிடயம் தொடர்பில் ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில்,

அரசிற்கும், விடுதலைப்புலிகளுக்கும் இடையில் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டவுடன் நாகர்கோவல் பாதை மக்கள் போக்குவரத்திற்குத் திறந்துவிடப்படும் என்று நம்பியிருந்து ஏமாற்றமடைந்துள்ளோம்.

இப்பாதையைத் திறப்பதன் மூலம் வடமராட்சி கிழக்குப் பகுதி மக்களிற்கும் வடமராட்சி மக்களுக்கும் இடையில் தொடர்புகள் ஏற்பட வழி ஏற்படுவதுடன் குடா நாட்டில் வீதி விபத்துக்களும் குறைய வாய்ப்பு ஏற்படும்.

அத்துடன், இப்பகுதி மக்களும் தமது அன்றாடக் கடமைகளைச் சீராக நிறைவேற்ற முடியும் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-43)

# கொள்ளிடம் ஆற்றிலிருந்து தங்கப் புதையல் கண்டெடுப்பு!

கொள்ளிடம் ஆற்றில் தங்கப் புதையல் கணடெடுக்கப்பட்டுள்ளது. இதனைப் பங்கிடுவதில் தகராறு ஏற்பட்டுள்ளதால் அவற்றை அதிகாரிகள் கைப்பற்றினர்.

ஜெயங்கொண்டம் அருகே கொள்ளிடம் ஆற்றில் கண்டெடுக்கப்பட்ட தங்கப்புதையலை பங்கிடுவதில் தகராறு ஏற்பட்டது. இது குறித்து அறிந்த அதிகாரிகள் விரைந்து வந்து புதையலை கைப்பற்றினர்.

பெரம்பலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் அருகே உள்ள தாபழூர் பொலிஸ் சரகம் கார்குடி கிராமத்தைச் சேர்ந்தவர் சின்னத்தம்பி. இவரது மகன் கதாநாயகன் (வயது26). இவர் சம்பவத்தன்று காலை கொள்ளிடம் ஆற்றுக்கு குளிக்கச் சென்றார். அங்கு தண்ணீர் குறைந்த அளவில் ஓடிக்கொண்டிருந்தது. அப்போது ஆற்று மணலில் புதைந்த நிலையில் ஒரு மண் கலசம் தென்பட்டது. அதை கதாநாயகன் பார்த்துவிட்டார்.

அந்த நேரத்தில் அதே பகுதியைச் சேர்ந்த அவரது நண்பர் ரஜினி (வயது24) என்பவரும் அங்கு வந்துவிட்டார். பின்னர் 2 பேரும் சேர்ந்து அந்த மண் கலசத்தை எடுத்து உடைத்துப் பார்த்தனர். அதில் 25 தங்க மூக்குத்திகள் இருந்தது. இதை பார்த்ததும் 2பேர் முகத்திலும் ஆனந்தம் பொங்கியது.

அப்போது கதாநாயகன் இதை நான் தான் முதலில் பார்த்தேன். இது எனக்குத் தான் சொந்தம் எனக்கூறி உள்ளார். இதை ரஜினி ஏற்கவில்லை. எனக்கும் பங்கு வேண்டும் என கூறினார். பின்னா தங்க மூக்குத்திகளை ஆளுக்கு பாதியாக பிரித்துக் கொள்வது என முடிவு செய்தனர். அப்போது கதாநாயகன் ஒரு மூக்குத்தியை ஒளித்து வைத்துக் கொண்டு 24 மூக்குத்திதான் இருக்கிறது எனக் கூறினராம். இதனால் 2 பேரும் தலா 12 மூக்குத்திகளை பிரித்துக் கொண்டு சென்று விட்டனராம்.

பின்னர் ஓரிரு நாள் கழித்து, ரஜினி, கதாநாயகனிடம் வந்து மண் கலசத்தில் தங்க மூக்குத்திகள் அதிகமாக இருந்தது. ஆனால் நீ எனக்கு குறைவாக கொடுத்து என்னை ஏமாற்றிவிட்டாய். எனக்கூறி தகராறு செய்தாராம். இதனால் மீண்டும் 2 பேருக்கும் இடையே தகராறு ஏற்பட்டது. இதனால் புதையல் கிடைத்த விவகாரம் ஊருக்குள் காட்டுத்தீ போல பரவியது. ஊர் முழுவதும் பரபரப்பாக பேசிக்கொண்டனர்.

இது குறித்து தகவல் அறிந்த ஜெயங்கொண்டம் தாசில்தார் மூர்த்தி சம்பவ இடத்தற்கு விரைந்து சென்று முதலில் கதாநாயகனிடம் இருந்த தங்க மூக்குத்திகளை பறிமுதல் செய்தார். ரஜினி தலைமறைவாகி விட்டார் பின்னர் அவரை தேடிப்பிடித்து புதையல் கிடைத்தால் அது அரசாங்கத்துக்குத் தான் சொந்தம். எனவே ஒப்படைத்துவிடுங்கள் எனக கூறினார். இதையடுத்து ரஜினியும் தன்னிடமிருந்து தங்க மூக்குத்திகளை ஒப்படைத்துவிட்டு சென்றார்.

ஆற்றில் கிடைத்த தங்க மூக்குத்திக்கள் 1000ஆண்டுகள் பழமை வாய்ந்ததாக இருக்கலாம் என கூறப்படுகிறது. தற்போது இந்த மூக்குத்திகள் தொல்பொருள் துறை வசம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இது குறித்து தொல்பொருள் துறையினர் ஆய்வு நடத்தி வருகின்றனர். அரியலூர் அருகே ஏற்கனவே இதேபோல் ஒரு புதையல் கிடைத்தது குறிப்பிடத்தக்கது. அதில் செப்புக் காசுகள் இருந்தன. (ற)

# மே - 16 முதல் 22 ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனம்

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 16ஆம் திகதியிலிருந்து 22 ஆம் திகதி வரை டெங்கு ஒழிப்பு வாரமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இவ்குறிப்பிட்ட தினத்தில் யாழ்.மாவட்டத்தில் டெங்குக் காய்ச்சலை ஒழிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்றுக்காலை யாழ்.மாவட்ட செயலகத்தில் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஸ் தலைமையில் நடைபெற்றது.

இக் கலந்துரையாடலில் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் கேதீஸ்வரன், சமூக சேவை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சுகாதார வைத்திய அதிகாரிகள் மற்றும் உள்ளூராட்சி திணைக்கள அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனா.

இக்கலந்துரையாடலில் கிராமிய நிறுவனங்கள் மட்டத்திலும் ஒவ்வொரு வீடாகச் சென்றும் டெங்குக்காய்ச்சலை ஒழித்தல் தொடர்பான பிரசாரங்களை மேற்கொளவதற்கு மாவட்ட பிரதேச, கிராமிய ரீதியாகவும் குழுக்களை அமைத்து அக்குழுக்கள் மூலம் டெங்கு ஒழித்தல் நடவடிக்கைகளை மேற் கொள்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலும், யாழ்.மாவட்டத்தில் 1995 ஆம் ஆண்டு 440 பேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டதுடன், 11பேர் இதனால் இறந்துள்ளனர்.

இதேபோன்று 1996 ஆம் ஆண்டு 1294 பேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு 54பேர் இறந்துள்ளனர்.

1997ஆம் ஆண்டு 980பேர் பீடிக்கப்பட்டு 17பேர் இறந்துள்ளனர். 1998ஆம் ஆண்டு 1275 பேர் பீடிக்கப்பட்டு 8பேர் இறந்துள்ளனர்.

1999ஆம் ஆண்டு 1688பேர் பீடிக்கப்பட்டு 14பேர் இறந்துள்னர். 2000ஆம் ஆண்டு 5203 பேர் பீடிக்கபபட்டு 37பேர் இறந்துள்ளனா. 2001 ஆம் ஆண்டு 5986பேர் பீடிக்கப்பட்டு 54பேர் இறந்துள்ளனர். 2002ஆம் ஆண்டு 8931 பேர் படிக்கப்பட்டு 64பேர் இறந்துள்ளனர். 2003ஆம் ஆண்டு 4749 பேர் பீடிக்கபபட்டு 32 பேர் இறந்துள்ளனர். 2004ஆம் ஆண்டு 15434 பேர் பீடிக்கப்பட்டு 88பேர் இறந்துள்ளார்கள்.

சென்ற வருடம் இவ் டெங்கு நோயினால் அதிகமானோர் பீடிக்கப்படடதுடன், கடந்த வருடங்களைவிட சென்றவருடம் கூடுதலானோர் இறந்துள்ளமையும குறிப்பிடத்தக்கது.

இதனால் இந்த வருடமும் டெங்குநோய்த் தாக்கத்தை கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. இதன் ஒரு கட்டமாகவே நேற்றைய கூட்டம் இடம்பெற்றது. (ந-19)

# சட்டவிரோதமாக இந்தியா சென்ற முல்லைத்தீவு இளைஞர் கைது

(புதுடில்லி)

இலங்கையில் இருந்து மர்ம படகில் இந்தியாவிற்குச் சென்ற இளைஞர் ஒருவர் மண்டபம் அருகே கைது செய்யப்பட்டுள்ளார்.

அவரிடம் இருந்த ரூ.14ஆயிரம் பணம் பறிமுதல் செய்யப்பட்டது. அவருடன் வந்த மற்றொரு இளைஞரை பொலிஸார் தேடி வருகிறார்கள்.

முல்லைத்தீவுப் பகுதியை சேர்ந்த முத்து மகன் விஜயகுமார் (வயது 26) ஏன்பவரும் கணேசன் என்பவரும் ஒரு மர்ம படகில் கடந்த 6ஆம் திகதி இங்கிருந்து தனுஷ் கோடி சென்றனர்.

அவர்கள் நேற்று முன்தினம் காலை மணடபம் மேம்பாலத்தில் சென்றுகொண்டிருந்த போது, மண்டபம் பொலிஸ் சப-இன்ஸ்பெகடர் சாதுரமேஷ் அப்பகுதியில் ரோந்து சென்று கொண்டிருந்தனர். அவரை கண்டதும் இந்த 2 இளைஞர்களும் தப்பி ஓடினார்கள்.

அவர்களை பொலிஸ் சப் -இன்ஸ்பெக்டர் சாதுரமேஷ் விரட்டிச் சென்றார். இதில் விஜயகுமார் மட்டும் பிடிபட்டார். கணேசன் தப்பி ஓடி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிடிபட்ட விஜயகுமாரிடம் பொலிஸார் விசாரணை நடத்தியபோது கடந்த சில மாதங்களுக்கு முன்பு இலங்கையில் ஏற்பட்ட சுனாமி தாக்குதலில் அவரது பெற்றோர் இறந்து விட்டார்கள் என்றும் நெல்லை அகதிகள் முகாமில் தங்கி இருக்கும் எனது சகோதரியான கலாவைப் பார்க்க வந்ததாகவும் தெரிவித்தார்.

அவரைச் சோதனை செய்த போது அவரிடம் 14ஆயிரம் ரூபா பணம் இருந்தது, அதை பொலிஸார் பறிமுதல் செய்தனர். இவர் மீது பாஸ்போர்ட் சட்டத்தின் கீழ் பொலிஸார் வழக்குப்பதிவு செய்து கோட்டில் ஆஜர் செய்த போது அவரை 15 நாள் காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மேலும் இலங்கையில் இருந்து விஜயகுமார் இந்தியா வந்ததற்கு வேறு காரணம் உள்ளதா என பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர். தப்பி ஓடிய கணேசனை பொலிஸார் வலைவீசி தேடி வருவதாகத் தெரியவருகிறது. (ற)

# ஜனாதிபதியின் செயற்பாடுகள் ஆச்சரியத்தை தருகின்றனவாம்

## ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக் காலத்தில் யுத்தநிறுத்த உடன்பாட்டை ஏற்றுக் கொள்ளாத ஜனாதிபதி தற்போது தனது ஆட்சியில் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை தொடர்ந்தும் கடைப்பிடிக்க வேண்டும் என இரு தரப்புக்கும் அறிவுறுத்தி வருகிறார்.

ஜனாதிபதியின் இத்தகைய செயற்பாடுகள் பெரும் ஆச்சரியத்தை தருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

யுத்தநிறுத்த உடன்பாட்டை ஏற்படுத்தியதும் புலிகளுடன் நேரடி பேச்சுவார்த்தை நடத்தியதும் ஐக்கியதேசியக் கட்சியே ஆகும்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச சந்தர்ப்பம் கிடைத்திருப்பது இதுவே முதல் தடவையென ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இது முழுமையான பொய்யெனவும் பீரிஸ் தெரிவித்தார். (க-9)

# திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

தாமோதரம்பிள்ளை விதி, சங்கத்தானை சாவகச்சேரி என்னும் இடத்தில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையின் இலவச கணனிப் பயிற்சி நிலையம் எதிர்வரும் 15ஆம் திகதி திறக்கப்படவுள்ளது.

எனவே ஆங்கில, கணனி வகுப்புகளுக்குப் பதிவு செய்த மாணவர்கள் அனைவரையும எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை தமது நிலையத்திற்கு வருகை தந்து பதிவுகளை உறுதிப்படுத்திக் கொள்ளுமாறு மாணவர் பேரவை பொறுப்பாளர் அறிவித்துள்ளார். (ற)

# கலை இலக்கியப் பெருவிழா

(மருதங்கேணி)

கலாசார மற்றும் தேசிய மரவுரிமைகள் அமைச்சினால் பிரதேச, மாவட்ட, மகாண மட்டத்திலான கலை இலக்கியப் பெருவிழா நாடு முழுவதும் நடாத்தப்படுகிறது.

அதன் அடிப்படையில் மருதங்கேணி பிரதேச மட்டத்திலான போட்டிகளும் நடாத்தப்படவுள்ளன. இவற்றில் பங்குபற்ற விரும்புவோர் தமது ஆக்கங்களை மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு அனுப்பிவைக்குமாறு உதவி அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

இப்போட்டிகளில் கட்டுரைப்போட்டி சிரேஷ்ட, கனிஷ்ட பிரிவுகளாக நடத்தப்படும்.

கவிதை, சிறுகதை போட்டிகளில் யாவரும் பங்குகொள்ளலாம்.

குறுநாடாக எழுத்துப்போட்டிகள் மற்றும் சித்திரப்போட்டி கனிஷ்ட, சிரேஷ்ட, திறந்ததென மூன்று பிரிவுகளாக நடாத்தப்படும்.

நாட்டுப்பாடல் போட்டி கனிஷ்ட, சிரேஷ்ட திறந்ததென மூன்று பிரிவுகளுக்கும் தனிப் போட்டி நிகழ்ச்சியாகும்.

கலை மன்றங்களுக்கான நடனப்போட்டியல் கலாச்சார அலுவல் திணைக்களத்தால் மகாகாண சபையால் பதிவு செய்யப்பபட்ட கலை அமைப்புக்கள் மாத்திரம் பங்கு பற்ற முடியும்.

மேலதிக விபரங்களை தத்தமது கிராம அலுவலரிடமோ மருதங்கேணி உதவி அரசங்க அதிபர் பணிமனையிலோ பெற்றுக்கொள்ளலாம். (க-35)

# இளம் கலைஞர் பயிற்சிநெறி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணத்திலுள்ள இளம்கலைஞர்களுக்கான பயிற்சி நெறியினை இந்துசமய கலாசார அமைச்சின் அனுசரணையுடன் 'சர்வதேச வாழும் கலை அறநிறுவனம்' நடாத்தவுள்ளது.

எதிர்வரும் 18ஆம் திகதி முதல் 24ஆம் திகதி வரை நடைபெறவுள்ள இப்பயிற்சி நெறியில் பங்குபற்ற விரும்பும் 18 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட ஆண் பெண் இருபாலாரும் பலாலி வீதி, கந்தர் மடத்திலுள்ள இந்து சமயப் பேரவையிலோ அல்லது நல்லூர் நாவலர் மணிமண்டபத்திலோ தமது பெயர்களைப் பதிவு செய்துகொள்ளலாம்.

காலை 7.30 மணி தொடக்கம் மாலை 6மணிவரை நடைபெறும் இப்பயிற்சி நெறியின் போது மதிய உணவு இலவசமாக வழங்கப்டவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-7-51)

# இராணுவத்தின் ஆக்கிரமிப்பு தொடருமாயின் தீர்வு பற்றிப் பேசுவதில் எதுவித அர்த்தமுமில்லை

## திருமலை அரசியல்துறைப் பொறுப்பாளர்

(திருகோணமலை)

தமிழர் தாயகத்தில் தொடர்ந்தும் இராணுவத்தினரின் ஆக்கிரமிப்பு இருக்குமாயின் தீர்வுகள் பற்றிக் கதைப்பதில் அர்த்தமில்லை என திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சம்பூரில் நேற்று முன் தினம் நடைபெற்ற கமநல சேவை திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பொதுக்கட்டமைப்புப் பற்றி பேசி வரும் அரசாங்கம் சுனாமியினால் பாதிக்கப்பட்ட மக்கள் சீமெந்து உட்பட கட்டடப் பொருட்களைக் கொண்டு செல்லத் தடை விதித்திருக்கின்றது இதனால் ஏற்படப் போகும் பயன் என்ன?

கட்டைப்பறிச்சான் இராணுவச் சோதனைச் சாவடியூடாக சீமெந்து உட்பட கட்டடப் பொருட்களைக் கொண்டு செல்ல இராணுவத்தினர் தொடர்ந்தும் தடைவிதித்து வருகின்றனர்.

இந்தத் தடை தொடர்பாக இந்தப் பிரதேச மக்கள் ஏற்கனவே எதிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்ததாகவும் தனது உரையில் சுட்டிக் காட்டிய எழிலன்,

இதன் பின்னர் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ இந்தத் தடையினை நீக்குமாறு இராணுவத்தினருக்கு உத்தரவிட்டிருந்த போதிலும் இராணுவத்தினர் இந்த உத்தரவினை பொருட்படுத்தாது தொடர்ந்தும் தடைவிதித்து வருகின்றனர் எனவும் குறிப்பிட்டார். (ஈ-4)

# இலங்கை-ஐரோப்பா உறவைப் பலப்படுத்த துரித நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கும் ஐரோப்பிய சமூக நாடுகளுக்குமிடையில் வர்த்தகம் முதலீடு என்பவற்றை அதிகரிப்பதற்கே முக்கியத்துவம் அளிக்கப்படுமென்று ஐரோப்பிய ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இலங்கையின் உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்துவதற்கான திட்டங்களுக்கு நிதியுதவி வழங்குவதன் அடிப்படையிலும் இத்தகைய உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வதற்கு ஐரோப்பிய சமூக நாடுகளின் சந்தைகளைப் பயன்படுத்துவதன் மூலமும் இந்த நோக்கம் நிறைவேற்றப்படவுள்ளது.

ஐரோப்பிய நாடுகள் தினம் நேற்று கொண்டாடப்பட்டுள்ளது. இதனையொட்டி ஐரோப்பிய ஆணைக்குழுவின் பிரதம அதிகாரி வூட்டான் வில்ரன் விடுத்துள்ள செய்தியில் இந்தத் தகவல்களைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் தனியார்துறைக்கும் ஐரோப்பிய சமூகத்திற்கும் இடையிலான உறவுகளை பலப்படுத்துவதற்கு விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமென்றும் அவர் குறிப்பிட்டார். இதேசமயம் ஐரோப்பிய ஆணைக்குழுவிற்கும் இலங்கைக்குமிடையிலான உறவுகள் 1975ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பித்துள்ளன. இந்த ஆண்டில் இலங்கை அரசாங்கத்துடனான வர்த்தக ஒத்துழைப்பு பற்றிய உடன்படிக்கை ஒன்றில் ஐரோப்பிய ஆணைக்குழு கைச்சாத்திட்டிருந்தது. (க-5)

### சுனாமியால் பாதிப்புற்ற பிரதேசத்தில்

# இயல்பு நிலையை ஏற்படுத்த அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் திருப்தியளிக்கிறது

(கொழும்பு)

மனித உரிமை ஆணைக்குழுவின் சுனாமி அனர்த்த குழு கடற்கோள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்யவும் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும் அரசாங்கம் எடுக்கும் முயற்சிகள் திருப்தி தருவதாகக் கூறியிருக்கின்றது.

இந்தக் குழுவின் தலைவர் லயனல் பெர்னாண்டோ இதுபற்றிக் கூறுகையில், அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதிலும் பாதிப்புற்ற மக்களின் வாழ்க்கைத்தரத்தை [illegible] உயர்த்துவதிலும் அரசு எடுக்கும் முயற்சிகளை நாம் கடந்த நான்கு மாதங்களில் நடத்திய ஆய்வின் மூலம் அறிந்துள்ளோம்.

சுனாமி அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட சகல மாவட்டங்களிலும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



கடந்த சில தினங்களாக குழுவின் அங்கத்தவர்கள் காலிப் பிரதேசத்தில் ஆய்வுகளை மேற்கொண்டு அந்தப் பிரதேசத்திலுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் அதிகாரிகளை சந்தித்து தகவல்களை சேகரித்தனர்.

காலி மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பிரதேசங்களிலுள்ள குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிவாரணம் மற்றும் மேற்கொள்ளப்பட்டுள்ள மீள்கட்டுமான வேலைகள் திருப்திகரமானதாக இருந்தன.

அரசினால் வழங்கப்பட்ட சகல கொடுப்பனவுகளும் உதவிகளும் பாதிப்புற்ற குடும்பங்களுக்கு கிடைத்துள்ளன.

அதுமட்டுமன்றி காலி மாவட்டத்தில் அனர்த்தத்தினால் அழிந்து போன ஆயிரத்து 403 வீடுகளுக்கு பதிலாக ஏற்கனவே ஆயிரத்து 818 தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

நாம் மேற்கொண்ட இந்த ஆய்வின் விரிவான அறிக்கை ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு


## வலம்புரி
## பிரதேச செய்தியாளர்கள் (பயிலுநர்கள்) பதவிக்கு ஆட்சேர்த்தல்

பின்வரும் பிரதேசங்களில் பிரதேச செய்தியாளர்களை (பயிலுநர்கள்) நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

☛ பத்திரிகைத்துறையில் ஆர்வமுள்ளவர்களும் க.பொ.த.(சா/த) இல் சித்தியடைந்தவர்களும் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

☛ பயிலுநர்கள் தரத்தில் 3 மாதங்கள் ஈடுபடுத்தப்படுவர். இக் காலத்தில் சேவையில் திருப்தியும் ஒழுங்கும் ஆர்வமும் காணப்படுமிடத்து அவர்கள் நிரந்தரமாக்கப்படுவர்.

☛ பயிலுநர்களாகத் தெரிவு செய்யப்படுபவர்கள் நிறுவனத்துடன் பிணை ஒப்பந்தம் செய்து கொள்ளல் வேண்டும்.

☛ குறித்த பிரதேசத்தில் நிரந்தரமாக வசிப்பவர்கள் மட்டுமே அந்தந்தப் பிரதேச செய்தியாளர் பதவிக்கு விண்ணப்பிக்க முடியும்.

☛ இலங்கையிலிருந்து வெளிவரும் வேறு பத்திரிகைகளிலும் ஊடகங்களிலும் செய்தியாளர்களாகப் பணியாற்றுபவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கமுடியாது.

☛ ஏற்கனவே பத்திரிகைத் துறையில் அனுபவமுள்ளவர்கள் விண்ணப்பிப்பின் அவர்கள் நிரந்தர செய்தியாளர்களாக உள்ளீர்க்கப்படுவர்.

தகுதியானவர்கள் முழுப் பெயர் ,நிரந்தர முகவரி, தபால் முகவரி, பால், பிறந்த தேதி, தே.அ.அ. இல; விவாக நிலை ,தொழில் புரியும் இடம் ,பதவி (இருப்பின் ) கிராம சேவையாளர் பிரிவு, பிரதேச செயலாளர் பிரிவு, பிரதேசசபைப் பிரிவு, தொலைபேசி இலக்கம்(இருப்பின்), கல்வித்தகைமை என்பவை உள்ளிட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை,

*பிரதம ஆசிரியர் வலம்புரி,*
*15 வெள்ளாந் தெரு,*
*வண்ணார் பண்ணை*
*யாழ்ப்பாணம்.*

என்ற முகவரிக்கு 31.05.2005 ஆம் தேதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அன்றேல் தபால் மூலமோ அனுப்பி வைக்கவும்.

*-நிர்வாக உத்தியோகத்தர்.*

## பிரதேச செய்தியாளர் (பயிலுநர்) தெரிவுக்கான பிரதேசங்கள்

### வலிகாமம்
திருநெல்வேலி
நல்லூர்
கந்தர்மடம்
கோண்டாவில்
கொக்குவில்
மானிப்பாய்
உரும்பிராய்
சண்டிலிப்பாய்
சங்கானை
சித்தன்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை

வல்வெட்டி
வல்வெட்டித்துறை
தொண்டைமானாறு
துன்னாலை
அல்வாய்
வியாபாரிமூலை
நாகர்கோவில்
செம்பியன்பற்று
மணற்காடு
கொற்றாவத்தை
பொலிகண்டி

### தென்மராட்சி
நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்



இலங்கை மின்சாரசபை யாழ். பிரதேச பொறியியலாளர் அலுவலகத்தால் பொறியியல் உதவியாளர் எஸ்.ரி.கணநாதனுக்கு நடாத்தப்பட்ட சேவை நலன் பாராட்டு பிரிவுபசார வைபவத்தில் யாழ். மாவட்ட மின் பொறியியலாளர் எம்.அமுதலிங்கம் மாலை அணிவிக்கின்றார். படத்தில் மின் அத்தியட்சகர்கள் மற்றும் அலுவலகஉத்தியோகத்தர்கள் காணப்படுகின்றனர்.

# தேசிய கல்வியியற் கல்லூரியின் 5 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நேற்று முன்தினம் ஆரம்பமான யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியின் 5 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்ச்சிகள் வரும் 16,20,25,30 ஆம் திகதிகளிலும் ஜூன் மாதம் 5ஆம் திகதியும் மேற்படி கல்லூரியின் பிரார்த்தனை மண்டபத்தில் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன் தலைமையில் நடைபெறும்.

16 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு பேராசிரியர் ப.சந்திரசேகரம் நினைவுப் பேருரையில் "விடுதலைக்கான கல்வியில் ஆசிரியர், மாணவர் உறவின் பெறுமானங்கள்- கல்வியியல் தத்துவார்த்த வரலாற்று நோக்கு" எனும் பொருள் பற்றி குமாரசாமி சண்முகநாதன் பேருரை நிகழ்த்துவார்.

20 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு பேராசிரியர் கே.கைலாசபதி நினைவுப் பேருரையில் "EDUCATION IN A BATTERED,COLONIALIST SOCIETY, SOME REFLECTION ON THE EDUCATION SYSTEM DEVELOPED AMONG SRILANKAN TAMILS DURING THE LATE 19th CENTURY AND DURING THE 20th CENTURY" எனும் பொருள் பற்றி பேரா சிரியர் நித்தியானந்தமும், 25 ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு பேரா சிரியர் அ.துரைராஜா நினைவுப் பேருரையில் "பண்டைத் தமிழரின் வானியற் கல்வியின் சிந்தனைகள்" எனும் பொருள் பற்றி கலாநிதி மா.வேதநாதனும் எதிர்வரும் 30ஆம் திகதி மாலை 4.30 மணிக்கு இடம் பெறும் பேரறிஞர் கலாநிதி சொக்கன் நினைவுப் பேருரையில் கலாநிதி திருநாவுக்கரசு கமலநாதன், பால சுப்பிரமணியம் தனபாலன் ஆகியோரும் பேருரை ஆற்றுவார்கள்.

அடுத்த மாதம் 5 ஆம் திகதி நடைபெறும் நிகழ்ச்சியில் பொதுப் பணிகள், வைத்தியசேவை, சமூகப்பணிகள், கல்விப்பணிகள் ஆற்றிவரும் வைத்திய கலாநிதி லயன்வை தியாகராசா கௌரவிக்கப்படுவார்.

(து)

போன ஆயிரத்து 403 வீடுகளுக்கு பதிலாக ஏற்கனவே ஆயிரத்து 818 தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன.

நாம் மேற்கொண்ட இந்த ஆய்வின் விரிவான அறிக்கை ஒன்றை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு எதிர்வரும் யூன் மாதத்திற்குள் சமர்ப்பிக்கவுள்ளோம் என லயனல் பெர்னாண்டோ மேலும் கூறினார்.(க-5)

# ஊசி மருந்துகள் கைப்பற்றப்பட்டன

(கொழும்பு)

அனுமதிப் பத்திரமின்றி சட்ட விரோதமாக நாட்டிற்குள் கொண்டு வரப்பட்ட ஒரு தொகை ஊசி மருந்துகளை கட்டுநாயக்க விமான நிலைய சுங்கப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

இந்த மருந்துகளை நாட்டிற்குள் கடத்த முற்பட்டவருக்கு ஒரு இலட்சம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாக உதவி சுங்க அத்தியட்சகர் இந்திரஜித் ஜெயவர்த்தன தெரிவித்திருக்கிறார். (க-7,9)

# வதிவிட செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

யாழ் தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 21ஆம் திகதி தொடக்கம் 25ஆம் திகதி வரை ஆசிரியர்களுக்கான 5நாள் வதிவிட செயலமர்வு நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வுகளில் பங்குபற்ற விரும்பும் நிரந்தர நியமனம் பெற்ற ஆசிரியர்கள் தமது விண்ணப்பப் படிவங்களை தத்தமது வலயக் கல்விப் பணிப்பாளரூடாக கல்வியியற் கல்லூரி பீடாதிபதிக்கு எதிர்வரும் 14ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்படப் படிவத்தின் மாதிரியை வலயக் கல்வி பணிமனையிலும் யாழ்.கல்வியியற் கல்லூரியிலும் பார்வையிடலாம். (க-5)

சித்தன்கேணி
அராலி
வட்டுக்கோட்டை
மாதகல்
பண்டத்தரிப்பு
சில்லாலை
தாவடி
இனுவில்
மருதனார்மடம்
சுன்னாகம்
மல்லாகம்
தெல்லிப்பழை
நாவாந்துறை
கொழும்புத்துறை
பாசையூர்
வண்ணார்பண்ணை
கொட்டடி
நாயன்மார்கட்டு
கல்வியங்காடு
நீர்வேலி
சிறுப்பிட்டி
ஆவரங்கால்
அச்சுவேலி
இடைக்காடு
புத்தூர்
ஊரெழு
அச்செழு
புன்னாலைக்கட்டுவன்
குப்பிளான்
ஓட்டுமடம்
நீராவியடி
அத்தியடி
அரியாலை

## வடமராட்சி

கரவெட்டி
கரணவாய்
நெல்லியடி
நவிண்டில்

பொலிகண்டி

## தென்மராட்சி

நாவற்குழி
மறவன்புலோ
கைதடி
நுணாவில்
சாவகச்சேரி
மீசாலை
மட்டுவில்
சரசாலை
கொடிகாமம்
வரணி
மிருசுவில்
எழுதுமட்டுவாள்
முகமாலை
பளை

## தீவகம்

மண்டைதீவு
ஊர்காவற்றுறை
வேலணை
புங்குடுதீவு
அனலைதீவு
எழுவைதீவு
சுருவில்
நயினாதீவு

## வன்னி

கிளிநொச்சி
வட்டக்கச்சி
முருகண்டி
மல்லாவி
மாங்குளம்
வவுனிக்குளம்
க்னகராயன் குளம்
நெடுங்கேணி
புளியங்குளம்
முள்ளியவளை
புதுக்குடியிருப்பு
விசுவமடு

# பிறவியில் ஏற்படும் இருதய ஓட்டைகள்

பிறவியிலேயே இருதயத்தில் மூன்றுவகையான ஓட்டைகள் ஏற் படுகிறது.

**மேலறை தடுப்புச்சுவரில் ஏற்படும் ஆர்ட்ரியல் செப்ட்ரம் எனப்படும் ஓட்டை.** இந்த மேலறை தடுப்பு சுவரில் நான்குவிதமான குறை



பாடுகள் ஏற்படுகின்றது. தடுப்பு சுவரின்மேல் பகுதியில் ஏற்படும் சைனஸ் வானோசிஸ், நிறைய குழந்தைகளுக்கு சாதார ணமாக வரும் ஆஸ்ட்ரியம் செகண் டம், கடுமையான விளைவுகளை ஏற் படுத்தும். ஆஸ்டியம் பிரைமம் மற் றும் மேலறை தடுப்பு சுவரே இல் லாமல் இருப்பது.

இதில் மூன்றாவது, நான்காவது வகை மோசமான விளைவுகளை ஏற்படுத்தும், எனவே குழந்தை பிறந்தவுடன் அறிகுறிகள் தெரிய ஆரம்பிக்கும். அறுவை சிகிச்சை மூலம் இதனை சரிசெய்து விட முடியும். குழந்தைகள் சிறிது தூரம் நடந்தாலும் மூச்சிரைப்பு வரும், வயிறு வீங்கும், கை, கால் களில் வீக்கம் ஏற்படும்.

சைனஸ் வானோசிஸ், ஆஸ்ட் ரியம் செகொண்டம் ஆகிய முதல் இரண்டுவகை இருதய ஓட்டை கள் ஏற்பட்டால், மேலறையில் இரத்த அழுத்தம் குறைவாக இருக்கும். இதனால் அவ்வளவு விரைவாக அறிகுறிகள் தெரியாது. எனவே குழந்தை பருவத்திலோ, இளமை பருவத்திலோ கண்டு பிடிக்க முடியாது.

வேறு ஏதாவது காரணத்திற் காக இளமை பருவத்தில் மருத் துவ பரிசோதனை செய்யும் வாய்ப்பு இருந்தால மட்டுமே, அவர்களுக்கு இந்த இரண்டுவகை ஓட்டைகள் இருப்பதை டாக்டர்களால் கண்டு பிடிக்கமுடியும்.

ஆனால் கொஞ்சம் கவனமாக இருநதால் இருதய ஓட்டைகளைக் கண்டுபிடிக்கமுடியும். அதாவது, குழந்தையாக இருக்கும்போது, அடிக்கடி சளி பிடித்தால் மூச்சி ரைப்பு படபடப்பு உண்டானால், வயதுக்கு ஏற்ற வளர்ச்சி குழந் தையிடம் இல்லாமல் இருந்தால் அது முதல் இரண்டாவது வகை இருதய ஓட்டையின் அறிகுறிக ளாக இருக்கலாம்.

எந்தவகையான இருதய ஓட் டைகள் ஏற்பட்டாலும் சாப்பிடுவது தூங்குவது, விளையாடுவது போன்று சராசரியாக எந்த வேலை செய்தாலும் பாதிப்புகள் ஏற்படும். எல்லாவித இருதய ஓட்டைகளை யும் ஈ.சி.ஜி.எக்ஸ்ரே இருதய ஊடு ருவல் வரைவு ஆகிய பரிசோதனை கள் மூலம் கண்டுபிடிக்கலாம். இருதய ஓட்டைகளை அறுவை சிகிச்சை அல்லது அக்லூஷன் குமோசர்டின் என்ற ஓட்டை மூடும் கருவிமூலம் ஓட்டையை முடிவிட லாம். அறுவை சிகிச்சை இல்லா மல் குடை போன்ற திரையை வைத்தும் மூடலாம். இதற்கு அறுவை சிகிச்சையை விட அதிக மாக செலவாகும். இந்த கருவி கள் உள்நாட்டில் தயாரிக்கப்படு வதில்லை. வெளிநாடுகளில் இருந்துதான் இறக்குமதி செய் கிறார்கள். எனவே அதிகம் செல வாகும். சாதாரணமாக மேலறை தடுப்பு சுவரில் ஏற்படும் ஓட்டையை சில்க் துணியைவைத்து மூடி அறுவை சிகிச்சை மூலம் சரி செய்வதற்கு அதிக செலவாகும்.

**இரண்டாவது வகை கீழறை யில் ஏற்படும் ஓட்டை:** இதில் பெரிய ஓட்டை, சிறிய ஓட்டை, பல சிறு சிறு ஓட்டைகள் என்று மூன்று வகை உண்டு.

கீழறையில் எந்த மாதிரியான ஓட்டை இருந்தாலும் குழந்தைப் பருவத்திலேயே தெரிந்துவிடும். கீழறையல் ஓட்டை ஏற்படும்போது வலது கீழறையில் இரத்த அழுத் தம் 125 மில்லி மற்றா் இருக்கும். இதனால் இடது கீழறையில் இருந்து இரத்தம் வலது கீழறைக்கு செல்லும் இதனால் பால் குடிக்கும் போது, சாப்பிடும்போது மூக்கில் வரு வது, மார்புக்கூடு தூக்கி தூக்கி போடுவது, மார்புக்கும் வயிற்றுக்கும இடையில் பள்ளம் உண்டாவது போன்ற அறிகுறிகள் ஏற்படும்.

ஓட்டை இருப்பதை ஈ.சி.ஜி. எக்ஸ்ரே, இருதய வரைவு படம் (எக்கோ கார்டி யோகிராம்) இவற் றின்மூலம் கண்டுபிடித்துவிடலாம். அறுவை சிகிச்சை மூலம் இந்த ஓட்டையை மூடிவிடலாம். லேப் ராஸ்கோபக் அறுவை சிகிச்சை யில் சிறிய துவாரம்மூலமாகவே இந்த இருதய ஓட்டைகள் தற்போது சரி செய்யப்படுகின்றன. இதில் இரண்டு நாட்கள் மட்டும் மருத்து வமனையில் இருந்தால் போதும். அறுவை சிகிச்சை செய்த இடத் தில் எந்த தழும்பும் இருக்காது.

**மகாதமனிக்கும் பல்மனரி தம னிக்கும் இடையில் ஏற்படும் ஓட்டை:**

இதற்கு பேட்ரன் டாக்டர் ஆஸ் ட்ரி யோசிஸ் என்று பெயர். இதில் மகாதமனியில் இருந்து ரத்தம் பல்மனரி தமனிக்கு செல்கிறது. இந்த சமயத்தில் மகாதமனியின் ரத்த அழுத்தம் 120 மில்லி மீற்றர் இருக்கும். பல்மனரி தமனியில் இதுவே 25 இருக்கும். எனவே மகா தமனியின் ரத்த அழுத்தம் பல் மனரி பாதிப்பை ஏற்படுத்துகிறது. டக்ளஸ் குளோசர் என்ற முறை மூலம் அறுவை சிகிச்சை செய்து ஓட்டையை மூடிவிட்டால் இரத்த அழுத்தத்தினால் ஏற்படும் பாதிப்பை சரி செய்துவிடலாம்.

கீழறையில் ஏற்படும் ஓட்டை யினால் மூச்சிரைப்பு, படபடப்பு, மயக்

**பேராசிரியர் அர்த்தநாரி**

கம்போன்ற அறிகுறிகள் ஏற்படும். இருதயத்தில் ஏற்படும் ஓட்டைகள் நான்கு சதவீத குழந்தைகளுக்கு வருகிறது. பெண்குழந்தைகளுக்கு இருதயத்தில் ஓட்டை ஏற்பட்டால் முறையான சிகிச்சைக்கு பிறகு, திருமண வயதில் தராளமாக திரு மணம செய்து கொள்ளலாம். குழந் தைபெற்றுக்கொள்ளலாம். இருத யத்தில் ஏற்படும் ஓட்டை அவர்க ளுக்குப பிறக்கும் குழந்தைக்கும வரும் என்று அஞ்சத்தேவையில்லை.

# சாரதிகளின் கவனத்திற்கு!

(கொழும்பு)

மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தால் வழங்கப்படும் சாரதி அனுமதிப் பத்திரத்துடன் விநியோகிக்கப்படும் பிரதியையும் சாரதிகள் வாகனங்களை செலுத் தும்போது தம்வசம் கட்டாயமாக வைத்திருக்க வேண்டுமென பொலிஸ் போக்குவரத்துப் பிரி வின் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி லக்கி பீரிஸ் தெரிவித்துள்ளார்.

இந்தப்பிரதி, சாரதி அனுமதிப் பத்திரத்தின் ஒரு அம்சமான போதும் சாரதிகள் வாகனங்களைச் செலுத்தும்போது இப்பிரதிகளை வைத்திருப்பதில்லை என்பது ஆய்வுகளிலிருந்து தெரியவந்துள் ளது.

இதனால் போக்குவரத்து விதி களை மீறும் சாரதிகள் மீது நடவடிக்கை எடுக்கமுடியாதுள் ளது. எனவே எதிர்காலததில் இந்தப் பிரதிகளை வைத்திருக்க தவறியவர்கள் மீது சட்ட நடவ டிக்கை எடுக்கப்படும் எனத் தெரி வித்துள்ளார். (க-9)

# சைவசமய அறிவுப் போட்டிப்பரீட்சை

இணுவில் கந்தசுவாமி கோவில் வருடாந்த மஹோற்சவத்தை முன் னிட்டு இணுவில் கந்தசுவாமி கோவில் இளந்தொண்டர்சபை, இணுவில் இந்துசமய வளர்ச்சிச் சங்கம் ஆகியன இணைந்து நடாத தும் சைவசமய அறிவுப் போட்டிப் பரீட்சை எதிர்வரும் 28ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.30மணிக்கு பரீட்சை நடைபெறவுள்ளது.

இப்பரீட்சைக்குத் தோற்றவுள் ளோர் விண்ணப்பப் படிவத்தினைத தயாரித்து அதனைப் பூர்த்தி செய்து "செயலாளர், சைவப்பணி மனை, இளந்தொண்டர் சபை, இணுவில் கந்தசுவாமி கோவில்" என்ற விலாசத்துக்கு எதிர்வரும் 18ஆம் திகதி பிப. 2.00 மணிக்கு முன் னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

இப்பரீட்சைக்கான வினாப்பத் திரங்கள் யாவும் அரசாங்கப்பாட சாலைகளுக்கு அமைவாகவும், அறநெறிப் பாடசாலைகளுக்கான பாடத்திட்டத்திற்கு அமைவாகவும் தயாரிக்கப்படும்.

இப்பரீட்சையானது, ஆரம்பப் பிரிவு 9.30-10.30 மணிக்கும், கீழ்ப்பிரிவு 9.30-11.00 மணிக்கும், மத்தியபிரிவு 9.30-11.30 மணிக்கும், மேற்பிரிவு 9.30-12.00 மணிக்கும் நடைபெறும்.

ஒவ்வொரு பிரிவிலும் முதலாம் இடத்தைப் பெறுபவர்களுக்குத் தங்கப்பதக்கமும், ஒவ்வொரு தரத் திலும் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு பரிசில்களும் தராதரப் பத்திரங்களும், ஏனைய சித்தியடைந்தவர்களுக்கு தராதரப் பத்திரங்களும் வழங்கப்படும்.

வெற்றி பெற்றவர்களுக்கான பரிசில்கள விஜயதசமி தினத்தன்று மாலை 5.00மணிக்கு சங்க பணி மனையில் நடைபெறும் விழாவில் வழங்கப்படும். (ற-2)

## வேரடி மண் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

நாவற்குழி வடக்கு வீரபத்திரர் கோவிலடி மாதர் குழுவும் அகதி கள் புனர்வாழ்வு நிறுவனமும் இணைந்து நடாத்தும் பாரம்பரிய கலை விளையாட்டு விழாவான வேரடி மண் நிகழ்வு இன்று செவ் வாய்க்கிழமை பி.ப.1.00 மணியள வில் வீரபத்திரர் கோவிலடி முன்ற லில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழவில் பிரதம விருந்தின ராக கியூடெக் நிறுவனப்பிரதிநிதி செல்வி என்.பத்மாவதியும், சிறப்பு விருந்தினராக நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திருமதி வ.மேகலிங்கம் மற்றும் கிராமசேவ கர் எஸ்.நடராசா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற)

# 10000 குளங்கள் புனரமைப்புத் திட்டத்தின் இரண்டாம் கட்ட வேலைகள் ஆரம்பம்

(அநுராதபுரம்)

பத்தாயிரம் பெரிய குளங் களை புனரமைக்கும் அரசின் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்ட குளங்கள் புனரமைக்கும் பணி கள் நேற்று முன்தினம் ஆரம் பிக்கப்பட்டுள்ளன.

அநுராதபுரம், ஹட்டஹஸ் கிலிய குளத்தின் இரண்டாவது கட்ட புனரமைப்பு வேலைகளின் ஆரம்ப வைபவத்தில் ஜனாதிபதி சநதிரிகா குமாரதுங்க பிரதம அதி தியாகக் கலந்துகொண்டார்.

இத் திட்டத்தின் இரண்டாவது கட்டத்தின் கீழ் இவ் வருடம் ஆயி ரத்து 500 குங்கள் புனரமைக்கப் படவுள்ளதாகவும் இதற்காக 70 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக வும் தெரிவிக்கப்படுகிறது.

இத்திட்டத்தின் முதலாவது கட்டத்தின் கீழ் கடந்த வருடம் நாடெங்கிலும் 954 குளங்கள் புன ரமைக்கப்பட்டன. இந்தப் பணிக ளுக்கென 40 கோடி ரூபா செல விடப்பட்டது.

கூட்டமைப்பு அரசாங்கம் பத விக்கு வந்த பின்னர் நாட்டில் மேற்கொள்ளப்பட்ட முதலாவது தேசிய திட்டமாக ஆயிரம் பெரிய குளங்கள் புனரமைக்கப்பட்டு வரு கின்றன.

தற்பொழுது பயன்படுத்தக் கூடிய நிலையிலுள்ள சிறியளவி லும் பெரிய அளவிலுமான 10ஆயி ரம் குளங்களை விஸ்தரித்து புன ரமைப்பதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

விவசாயத்தில் சுய தேவை களை பூர்த்திசெய்யும் ஒரு நாடாக வும், பொருளாதார வளமுள்ள ஒரு நாடாகவும் இலங்கையை மீண்டும் அபிவிருத்தி செய்து, விவசாயத்திற்கு பொருத்தமான சகல காணிகளிலும் நீர்ப்பாசன வசதியை ஏற்படுத்துவதே இத் திட்டததின் இறுதி இலக்காகும் என்று நீர்ப்பாசன அமைச்சு தெரி வித்துள்ளது.

அநுராதபுரம், ஹட்டஹஸ் கிலியவில் நேற்று முன்தினம் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு அமைசசா் அநுரகுமார திஸநாயக்க உட்பட பல அமைச்சர்களும் கலந்துகொண்டார்கள்.

(க-7,5)

# சிவராம் படுகொலை தொடர்பான விசாரணையில் புதிய தகவல்கள்!

சிரேஷ்ட ஊடகவியலாளர் சிவராமின் கொலை தொடர்பான சூத்திரதாரிகளை சட்டத்தின் முன நிறுத்த நடவடிக்கை எடுக்கப் படும் என்று பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க தெரிவித்துள்ளார்.

சிவராமின் படுகொலை தொடர பாக விசாரணைகள் நடைபெறு கின்றன. இது தொடர்பாக எமக் குப் புதிய தகவல்கள் கிடைத் துள்ளதாகவும் பாதுகாப்புக் கார ணம் கருதி அத்தகவல்களை வெளியிட முடியாது என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், ஊடகவியலாளர் சிவராம் படுகொலை தொடர்பாக நாம் கடும் கண்டனத்தை வெளிப் படுத்தியுள்ளோம்.

இந்த படுகொலை அரசாங்கத் திற்கு பெரும கவலை அளிக்கின் றது.

ஊடகவியலாளர் சிவராமின் படுகொலை மட்டுமன்றி இவ் வாறான படுகொலைகளுக்காளா னவர்களுக்கும் எமது அனுதா பத்தைத் தெரிவித்துக் கொள்வ துடன், கொலைகளை வன்மை யாகக் கண்டிக்கிறோம்.

ஊடகவியலாளர் சிவராமின் படு கொலை தொடர்பாக பல சந் தேகங்கள் முன்வைக்கப்படுகின் றன. எனினும் ஊகங்களை அடிப் படையாக வைத்து எந்த முடிவி னையும் நாம் எடுக்கமுடியாது. இதன்படி எமக்கும் விசாரணை கள் மூலம் பல புதிய தகவல் கள் கிடைத்துள்ளன. இவற்றை நாம் விசாரணை செய்து வருகி றோம்.

இந்த படுகொலையின் சூத் திரதாரிகள் யார்? பொறுப்பாளி கள் யார் என்பதை அறிய நாம் ஆவலாக இருக்கிறோம். இவ் விசா ரணைகள் முடிவடைய நீண்ட காலம் எடுக்கும். பொலிஸ் விசார ணைகள் சிறந்த முறையில் இடம் பெற்று வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ற-4)

# பதவி வெற்றிடம்

(கொழும்பு)

பொது நிர்வாக உள்நாட்டலு வல்கள் அமைச்சு அரச கரும மொழிகள் திணைக்களத்தில் உள்ள வேலைத்திட்ட அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு இலங் கைப் பிரஜைகளிடமிருந்து விண் ணப்பங்களை கோரியுள்ளது.

வேலைத்திட்ட அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு அங்கீகரிக் கப்பட்ட பல்கலைக்கழகமொன் றில் பட்டம் பெற்றிருப்பதுடன் சிங களம், தமிழ், ஆங்கிலம், வேலைத் திட்ட முகாமை, கணனி விஞ்ஞா னம்/தகவல் தொழில்நுட்பம், இதழியல் (**Journa lism**)/ வெகு சனத் தொடர்பு, சமூகவியல், கல்வி, கணக்கியல் போன்ற விட யங்களில் பட்டம் பெற்றுள்ளவர் களுக்கு முன்னுரிமை வழங்கப் படும்.

22 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்டவர்கள் இதற்காக விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பப் படிவங்களை ஜூன் மாதம் 3ஆம் திகதிக்கு முன் னர், "அரசகரும மொழிகள் ஆணை யாளர்" "அரசகரும மொழிகள் திணைக்களம்" "பாஷா மந்திரய" 341/7 கோட்டே வீதி, இராஜகிரிய என்ற முகவரிக்கு அனுப்பி வைத் தல் வேண்டும். (க-7,2)

28ஆம் திகதிஇடம்பெற்ற

## இறையியற் கல்லூரி

(பருத்தித்துறை)

இளைஞர்களையும், யுவதி களையும் சமய வாழ்வு வாழச் செய்வதற்கும், சமய போதகர் களாகவும் சமய சொற்பொழிவா ளர்களாகவும் வளர்த்தெடுப்பதற் குமாக இந்து இறையியற் கல் லூரி ஒன்றை நல்லூரில் நிறுவுவ தறகான முயற்சிகளில் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகன் ஈடு பட்டுள்ளார்.

(க-7,35)

# மக்களின் முக்கிய தேவைகளை பூர்த்திசெய்ய அரசு தவறிவிட்டது

## ஜி.எல்.பீரிஸ் குற்றச்சாட்டு

(கொழும்பு)

அரசாங்கமொன்றினூடாக மக் கள் எதிர்பார்க்கும் முக்கிய தேவைகளை இந்த அரசாங்கம் பூர்த்திசெய்ய தவறிவிட்டது என ஐக்கிய தேசியக்கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜி. எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

மக்களுக்கு தேவையான பொருட்களை நியாயமான விலை யில் பெறறுக்கொள்ள வகை செய் தல், மக்களுக்கு தேவையான சேவைகளை தொடர்ந்து மேற் கொள்ளுதல் சமூகத்தில் நீதியை நிலைநாட்டல் போன்ற மக்களின் முக்கிய தேவைகளை பூர்த்தி செய்ய அரசாங்கம் தவறிவிட்ட தாக அவர் விடுத்துள்ள அறிக் கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாளாந்தம் அதிகரித்துவரும அன்றாட பாவனைப் பொருட்களின விலையுயர்வால் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக வும் அவர் மேலும் சுட்டிக்காட்டி யுள்ளார்.

(க-9)

# நீங்கள் ஐஸ்கிறீம் பிரியரா?

கோடை காலத்தில் தாக்கத்தைத் தணிக்க ஐஸ், ஐஸ்கிரீம், குளிர்பானங்கள் ஆகியவற்றை அதிகமாகப் பயன்படுத்துகிறார்கள். இவை அனைத்தும் உடல் நலத்துக்குக் கேடு விளைவிக்கக் கூடியவை.

ஐஸ்கிரீம் சாப்பிடும் பழக்கம் நல்லதல்ல. தொடர்ந்து அளவுக்கு மீறி ஐஸ்கிரீம் சாப்பிட்டால் சைனஸ், டான் சில், குரல் பாதிப்பு போன்ற பல பிரச்சினைகள் வரக்கூடும்.

இதைத் தொடர்ந்து சாப்பிட்டு குண்டாகலாம் என நினைப்பார்கள். ஐஸ்கிரீம் சாப்பிட்டு குண்டானால் அதன் எதிர்விளைவுகள் மோசமாக இருக்கும். ஐஸ்கிரீமில் இருக்கும் சர்க்கரைச் சத்தும், கொழுப்புப் பொருட்களும் நமது உடலில் கொழுப்பைக் குறைப்பதற்குப் பதிலாக கொழுப்பை அதிகப்படுத்தும். இப்படி கொழுப்பு அதிகமாவதை நாம் குண்டாகுதல் என்கிறோம். கொழுப்புச் சத்து நமது உடலில் இரத்த நாளங்களில் படிந்து இரத்தக் குழாயைச் சுரக்கி இரத்த ஓட்டத் தடையை ஏற்படுத்துகிறது. இதயத்துக்குச் செல்லக்கூடிய இரத்தத்தின் அளவும், பிராண வாயுவின் அளவும் குறைந்து உயர்இரத்த அழுத்தம், இதயத் தசை வலுவிழப்பு, மாரடைப்பு போன்றவை நிகழ்கின்றன.

ஐஸ்கிரீமில் அடங்கியுள்ள சர்க்கரையால் நீரிழிவு, அதிக இரத்த அழுத்தம் கூட ஏற்படுகிறது. அதிக சர்க்கரையுடைய ஐஸ்கிரீம் மற்றும் குளிர்பானங்களை அருந்தும் போது அதை ஜீரணம் செய்ய உடனடியாக அதிகளவு இன்சுலின் சுரக்கிறது. இதனால் திடீரென்று உடலில் குளுக்கோஸ் அளவு குறைகிறது. இதன் வெளிப்பாடாக தலைவலி ஏற்படுகிறது.

சாப்பிட்ட பின்பு ஐஸ்கிரீம் உண்பது உணவைச் செரிக்க உதவுகிறது என்று சிலர் நினைக்கிறார்கள். சாப்பிட்டவுடன் நீர் அருந்துவதே ஜீரணமாகப் போதுமானது.

ஜீரணத்துக்கும் ஐஸ்கிரீமுக்கும் தொடர்பு இல்லை.

அடுத்து நாம் விரும்புச் சாப்பிடும் ஐஸ்கிரீம் நல்ல. சுத்தமான நீரில் தயாரிக்கப்பட்டதா என்பதை அறிய வாய்ப்பில்லை. எனவே இதில் கலந்துள்ள கிருமிகளால் நோய்த் தொற்று ஏற்படலாம்.

வெயில் காலத்தில் வெளியில் சென்று வந்தாலோ விளையாடி விட்டு வந்தாலோ உடனேயே குளிர் சாதனப் பெட்டியைத் திறந்து குளிர் பானங்களை அருந்துகிறார்கள். அதிகமாக தாகம் எடுத்தால் இனிப்பூட்டப்பட்ட குளிர்பானங்களை அருந்துவது மிகவும் தவறு. இதனால் தாகம் தணியாது. அதில் கலந்திருக்கும் சர்க்கரைச்சத்து உடலை அதிகமாகக் கொழுப்பாகத்தான் பயன்படுகிறது. தாகம் எடுக்கும் போது நீர் அருந்துவதுதான் மிகவும் சிறந்தது. நீர் தாகத்தைப் போக்கும். உடலில் இருந்து வியர்வையாக வெளியேறிய நீர்ச்சத்தை ஈடுகட்டும் அத்துடன் பசியும் அடங்கும்.

அதிக தித்திப்புள்ள பழச்சாறு அருந்துவதையும் தவிர்க்க வேண்டும். எலுமிச்சை மற்றும் சாத்துக்குடிசாறு அருந்தலாம். இதில் அதிகளவு நார்ச்சத்து உள்ளது. இப்பொழுது குறைந்தளவு கலோரியைக் கொடுக்கும் அதிக இனிப்புடைய ப்ருக்டோஸ் கலந்து குளிர்பானங்கள் தயாரிக்கப்படுகின்றன. சிறிது அதிகமாக அருந்தினாலோ இது வயிற்று வலியைக் கொடுக்கும் தன்மையுடையது.

ஒரு வேளைக்கும் மேலாக குளிர்பானம் அருந்தினால், வயிற்று வலியாலும், வயிற்றுப் போக்கினாலும் அவதிப்பட வேண்டியதிருக்கும். ஐஸ்கிரீம் சாப்பிடுவதற்குப் பதிலாக பழங்கள் சாப்பிடலாம.



வெயில் காலத்துக்கு ஏற்ற பானம் தண்ணீர்தான். நமது உடல் தசையிலும், மூளையிலும் 70 சதவீதம் நீர்தான் உள்ளது. இரத்தத்தில் 90 சதவீதம் நீர் உள்ளது. எலும்பில் கூட 20சதவீதம் நீர் உள்ளது. அதிகம் நீர் அருந்துவதால் உடல் எடை கூட குறையும். எப்படியெனில், நீர் உடலில் உள்ளகொழுப்பை அகற்றி எரிபொருளாக்குகிறது. கழிவுப் பொருட்களை அகற்றுகிறது. உடலிலுள்ள நச்சுப் பொருட்களை கரைத்து வெளியேற்றுகிறது.

நீரை நேரடியாக குளிர்சாதனப் பெட்டியில் இருந்து எடுத்து அதிகக் குளிர்ச்சியுடன் அருந்துவது தவறு. ஈறுகளுக்கும் பற்களுக்கும் இது கேடு உண்டாக்குகிறது. சளிச்சவ்வையும் செயல் இழக்கச் செய்கிறது. குளிர்ந்த நீருக்கு பக்டீரியா மற்றும் வைரஸைக் கட்டுப்படுத்தும் தன்மை கிடையாது. ஆகவே, அதில் இருக்கும் நோய்க் கிருமிகள் அத்தனையும் உடலுக்குள் செல்லாதவாறு தொண்டையில் இருக்கும் டான்சில்சதை கிருமிகளை வடிகட்டி வைத்துக் கொள்ளும் நோய்க்கிருமிகளின் வீரியம் கூடும்போதோ, உடலில் சக்தி குறையும் போதோ நோய் தொற்றிக் கொள்ளும். ஆகவேதான், பலருக்கு ஐஸ் நீர் அருந்தியவுடன் சைனஸ் அல்லது டான்சில் அல்லது சளியோ ஜுரமோ வருகிறது.

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 60

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



'நகைச்சுவைப் படங்கள் பலவற்றை இயக்கி, அதில் தானே கதாநாயகனாக நடிக்கும் நகைச்சுவை நாயகர்களில் ஒருவரான இவரை உங்களுககுத தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும 16ஆம் திகதிககு முனன் கிடைககக்கூடியதாக அனுபபிவைக்கவும்.

நீங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 60**
**வலம்புரி ~ சங்குநாதம**
**இல:- 15, வெள்ளாந்தெரு,**
**வண்ணார்பண்ணை,**
**யாழ்ப்பாணம.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளாகளுககு குலுககல்முறை மூலம தெரிவுசெய்யபபட்டு பரிசு வழஙகப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணததினை 'வலம்புரி' காரியாலயததில் பெற்றுக் கொள்ளவும.

**இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:-60**

| | |
|---|---|
| படத்தில் உள்ளவரின் பெயர் | :-........................ |
| அனுப்புபவரின் முழுப்பெயர் | :-........................ |
| அனுப்புபவரின் முகவரி | :-........................ |
| | ........................ |
| | ........................ |

**இவரைத்தெரியுமா? பரிசுப்போட்டி இல - 58 சரியான விடை**




நடிகை மனோரம்மா


**இவரைத் தெரியுமா பரிசுப்போட்டி இல. 58இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்**

| | |
|---|---|
| முதற் பரிசு | :~ஆ.தர்சிகா, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். |
| இரண்டாம் பரிசு | :~க.திவ்வியா, கைதடி மேற்கு, கைதடி. |
| மூன்றாம் பரிசு | :~த.இந்தினேஸ்வரன் 5 கண் மதவடி, சண்டிலிப்பாய். |

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்**

வே.குமாரசுவாமி, கரவெட்டி. பா.தவமணி, பருத்தித்துறை. சி.விவேக், பருத்தித்துறை. திருமதி.P.செல்வராணி, சங்கானை. வே.சுபாஜினி, மானிப்பாய். அண்ணாமலை. காரைநகர், K.கனகசபாபதி, தம்பசிட்டி. சி.சயந்தன், வட்டுக்கோட்டை. சி.கோவிந்தராஜன், யாழ்ப்பாணம். கு.விஜயகுமார், திருநெல்வேலி. கே.ஏ.வரன், புத்தூர். செ.புலேந்திரன், சுளிபுரம். ம.இராசேஸ்வரி, கோண்டாவில். கே.இராஜகோபால், வட்டுக்கோட்டை. இ.வசந்தினி, ஏழாலை. லோ.அபிராமி, வல்வெட்டித்துறை. கி.பவித்திரா, வரணி. அ.அனித்தா, வடலியூர். தி.ஜதுஸா, காரைநகர். மா.பாக்கியலட்சுமி, பருத்தித்துறை. ம.மயல்வாகனம், கரவெட்டி. ச.மைதிலி, வடமராட்சி. ம.கயல்விழி, தாவடி. பா.பரஞ்சோதி, மானிப்பாய். வ.விதுஷன், யாழ்ப்பாணம். கா.கனஸ்ரா, தம்பசிட்டி. த.கல்பனா, சங்கானை. வ.சயிலதா, கந்தர்மடம். க.பரணி, வேலணை. ப.பார்தீபன், பருத்தித்துறை. ம.கல்யாணி, வட்டுக்கோட்டை. S.வனதர்சன், கொக்குவில். அ.கோமதி, ஆனைக்கோட்டை. நா.சிநது, சுதுமலை. க.மனோகரன், நாவற்குழி. சி.இராசமணி, மானிப்பாய். ச.சந்திரா, ஆனைக்கோட்டை. ம.பிரியா, கூழாவடி. ச.மலர்விழி, மானிப்பாய். அ.சசி, ஆனைக்கோட்டை. ம.ஜனா, உடுவில். ற.உஷா, மானிப்பாய். ச.கஜசங்கவி, இணுவில்.

# எளிய மருத்துவ குறிப்புகள்



* அண்ணாசி பழச்சாறு அருந்துவதால் மஞ்சள் காமாலை மட்டுப்படும். ஒரு டம்ளர் சாறுடன் மிளகுத்தூள் சேர்த்து தினமும் அருந்தி வந்தால் உடல சோர்வு மறையும். சளித தொல்லை குணமாகும்.


* விளாம்பழத்தை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் இரத்தம் சுத்தமாகும். உடல் வளர்ச்சியும் புத்தி கூர்மையும் உண்டாகும்.

* தேனும், பாலும் கலந்து அதில் அப்பிள் துண்டுகளைச் சேர்த்து சாப்பிட்டால் நரம்புகளுக்கு புத்துணர்ச்சி அளிக்கும்.


தேனும், ரோஜா மலர் இதழ்களும், அப்பிள் துண்டுகளுடன் கலந்து உண்டால் இரத்தச்சோகை நீங்கும்.

* உடையாத கட்டிகளுக்கு வாழைப்பழத்தைக் குழைத்து போட கட்டி பழுத்து உடைந்து சீழ் வெளியேறிப் புண் ஆறும்.

* வாடாத பன்னீர் ரோஜா பூவை கைப்பிடி அளவு எடுத்து இருவேளை சாப்பிட்டால் சீத



பேதி, வயிற்றுக்கடுப்பு, மூலச் சூடு குணமாகும்.



* குங்குமப் பூவை, நசுக்கி நெற்றியில் பற்றுப்போட தலை வலி தீரும்.

* அகத்திக் கொழுந்தை கைப்பிடி அளவு காலையில் சாப்பிட்டு வர வாய்ப்புண், வாய்நாற்றம் மாறும்.

* சிறிய ஆமணக்கு விதையை அரைத்து தீப்புண்கள் மேல் பூசி வர தீப்புண்கள் ஆறும்.

* வெற்றிலையைப் பிழிந்து சாறு எடுத்து, தேன் கலந்து அருந்த இருமல் குணமாகும்.

* முருங்கைப்பிஞ்சு உடல் உஷ்ணத்தைத் தணிக்கும்.

## சுறுசுறுப்பு மன அழுத்தத்தை குறைக்கும்

விளையாட்டுக்களில் பங்கெடுத்துக் கொள்வது, அல்லது ஏதாவது ஒரு காரியத்தில் சுறுசுறுப்பாக இருப்பது ஆகியவற்றின் மூலம் விடலைப்பருவத்தில் உண்டாகும் மன ஆழத்தத்தை குறைக்க முடியும் என்று புதிய ஆய்வு சொல்கிறது.

7வயதிற்குட்பட்ட படிக்கும் குழந்தைகளில், உடல் ரீதியாக சுறுசுறுப்பாக இருந்த குழந்தைகளும், உடல் ரீதியான செயல்பாட்டை அதிகரித்துக் கொண்டே குழந்தைகளும் மன அழுத்தத்தால் பாதிக்கப்படுவது குறைவாக இருந்தது ஒருஆய்வின் போது தெரிய வந்தது நீண்ட நாள் நடத்தப்பட்ட மற்றொரு ஆராய்ச்சியில் விடலைப் பருவ பையன்களும், பெண்களும் சுறுசுறுப்பாக இருக்கவேண்டியது மிகவும் அவசியம். அப்படி இருந்தால் மன அழுத்த பாதிப்பு கணிசமாக குறையும் என்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

# கல்விப் பொதுத் தராதர (சா/த) மாதிரிப் பரீட்சை - 2005

## General Certificate of Examination (Ord. Level) Model Examination - 2005


**கணிதம்** **பகுதி - I**


**நேரம்:- 1மணித்தியாலம்** **ஆக்கம்:- சி.டியூக் பல்குணன்லாலா**

**01.** ஒரு முட்டை வைக்கும் தட்டில் 40 முட்டைகள் வைக்கலாம். 6 தட்டுகளில் எத்தனை டசின் முட்டைகள் வைக்கலாம்?

**02.** இந்த எண்கோலத்தில் அடுத்த இரு உறுப்புகளை எழுதுக.
48, 24, 12, 6, 3, ______, ______

**03.** y = 2x, y = x ஆகிய நேர்கோடுகள் சந்திக்கும் புள்ளியின் ஆள் கூறுகளைத் தருக.

**04.** 
நான்கு மேசைகளை வரிசையாக அடுக்கி அவற்றைச் சுற்றி 10 பேர் உட்கார்ந்து உணவருந்தலாம். இவ்வாறு அருகருகே மேசைகளை அடுக்கி 24 பேர் உணவருந்த எத்தனை மேசைகள் தேவை?

**05.** 

A இலிருந்து B இன் திசைகோள் $070^0$. B இலிருந்து A இன் திசைகோள் யாது?

**06.** சுருக்குக: $49 \div 0.7$


**07.** தீர்க்க : $\frac{7}{8} = \frac{49}{y}$

**08.** ஒருவன் (6,4) என்ற புள்ளியிலிருந்து புறப்பட்டு வடகிழக்குத் திசையில் நடந்து (t,9) என்ற புள்ளியை அடைந்தான். t இன் பெறுமானம் யாது?

**09.** 1cm ஆல் 10m குறிக்கப்படும் அளவிடையில் வரையப்பட்ட படத்தில் $7cm^2$ பரப்பளவு உண்மையில் எத்தனை $m^2$ ஐக் குறிக்கும்?

**10.** இரு வட்டங்களின் மையங்கள் 18 cm இடைத் தூரத்திலுள்ளன. வட்ட மையங்களின் ஆரைகள் 3cm, 5cm ஆகும். வட்டங்களின பரிதிகளில் உள்ள இரு புள்ளிகளின் மிகக் குறைந்த இடைத்தூரம் யாது?

**11.** ஒழுங்கான பல்கோணியொன்றின் சுற்றளவு 84 cm. அதன் ஒரு பக்க நீளம் 7cm. அதன் ஒரு புறக்கோணத்தின் அளவு யாது?


**12.** 

AB = 3cm, BC = 6 cm, CD = 2 cm, DE = 11cm

$A\hat{B}C = C\hat{D}E = 90^0$


(அ) AC இன் நீளத்தைச் சேடு வடிவில் தருக?
(ஆ) AE இன் நீளத்தைச் சேடு வடிவில் தருக?

**13.** உருளை A இன் குறுக்கு வெட்டுமுக ஆரை r cm, உயரம் hcm எனின் அதன் கனவளவு v $cm^3$ ஆனது $v = \pi r^2 h$ ஆல் தரப்படும். இந்த உருளையைப் போல இரு மடங்கு நீளமான ஆரையும், அரைப்பங்கு உயரமுமுடைய உருளை B இன் கனவளவு A இனதைப் போல எத்தனை மடங்காகும்?

**14.** 

செவ்வகக் கனவுரு ABCDEFGH இல் AB = 4cm, AE = 3CM, BC = 5cm எனின்
(அ) HC இன் நீளம் யாது?
(ஆ) $B\hat{H}C$ இன் அளவு யாது?

**15.** வியாபாரி ரு.4325 இற்கு வாங்கிய பொருளை விற்று கொள்விலையின் $\frac{2}{5}$ பங்கினை இலாபமாகப் பெற்றால் சதவீத இலாபம் யாது?

**16.** 

வீடுகளில் உபயோகிக்கப்பட்ட மின்சக்தியை KWh இல் அளக்கும் பழைய வகைக் கருவி படத்தில் காட்டப்பட்டுள்ளது. இதன் வாசிப்பினைக் கிட்டிய முழுவெண்ணில் தருக.


**17.** சைன் $\theta = \frac{5}{13}$ எனின் தான் ஐக் காண்க.

**18.** 6cm ஆரையுடைய உலோகக் கோளம் ஒன்றினை உருக்கி அடிவட்ட ஆரை 3cm உம் உயரம் 6cm உம் உள்ள கூம்புகள் எத்தனை செய்யலாம்?

**19.** $C + \frac{1}{C} = 3$ எனின் $C^2 + \frac{1}{C^2}$ இன் பெறுமதி காண்க.

**20.** $2^{-3}$ இனைத் தசம எண்ணாகத் தருக.


**21.** நகரங்கள் A,B என்பவற்றின் இடைத்தூரம் 240km. ஒருவன் A இலிருந்து B இற்கு 40 $Kmh^{-1}$ கதியிலும், மீண்டும் B இலிருந்து A இற்கு 60$Kmh^{-1}$ கதியிலும் பிரயாணம் செய்தால் அவனது சராசரிக் கதி யாது?


**22.** 

செவ்வகம் ABCD இல் பக்கம் AB ஆனது E வரை நீட்டப்பட்டுள்ளது. AB = 12cm, BC = 4Cm, $\Delta$ CDE இன் பரப்பளவு யாது?


**23.** $lg\ 2 = 0.301$, $lg\ 3 = 0.477$ எனின்
(அ) $lg5$ (ஆ) $lg6$ என்பவற்றைக் காண்க.

**24.** 150m நீளம் கொண்ட மாறாக்கதியில் செல்லும் புகையிரதம் ஒன்று 100m மேடையை முற்றாகக் கடப்பதற்கு 9 செக்கன்கள் எடுத்தது எனின், புகையிரதத்தின் கதியை km/h இல் தருக.

**25.** O இணை மையமாகவுடைய வட்டத்தின் பரிதியில் A என்பது நிலையான ஒரு புள்ளி. B என்பது பரிதியில் உள்ள மாறும் புள்ளி. வட்ட மையம் O இலிருந்து நாண் AB இற்கு வரையப்பட்ட செவ்வன் AX எனின் B இன் வெவ்வேறு நிலைகளுக்கு புள்ளி X இன் ஒழுக்கு யாது?




**26.** 

நீளம் 9cm, அகலம் 4cm ஆகவுள்ள செவ்வக அட்டையிலிருந்து வெட்டியெடுக்கக் கூடிய மிகப்பெரிய சதுரத்தின் பரப்பளவு யாது?

**27.** $\Delta$ABC இல் $A\hat{B}C$, $A\hat{C}B$ என்பவற்றின் இருகூறாக்கிகள் O இல் சந்திக்கின்றன.
$B\hat{O}C = 110^0$ எனின்,
(அ) x+y ஐக் காண்க.
(ஆ) 2x+2y ஐக் காண்க.
(இ) $B\hat{A}C$ இன் அளவு யாது?



**28.** திண்மக் கோளம் ஒன்றின் மேற்பரப்பளவு $90cm^2$. அதனை இரு பாதிகளாக வெட்டினால் கிடைக்கும் ஒரு பாதியின் மேற்பரப்பளவு யாது?

**29.** $\frac{2^6 \times 3^5}{3^x \times 2^y} = 2^4 \times 3^7$ எனின்,
(அ) x இன் பெறுமானம் யாது?
(ஆ) Y இன் பெறுமானம் யாது?

**30.** 

மேலேயுள்ள கோலம் தீக்குச்சுகளினால் ஆக்கப்பட்டது.
(அ) நாலாவது உருவிற்கு எத்தனை குச்சுகள் தேவை?
(ஆ) 20ஆம் உருவிற்கு எத்தனை குச்சுகள் தேவை?
(இ) n ஆம் உருவிற்கு எத்தனை குச்சுகள் தேவை?

# பொதுச் சுகாதார சட்டமூலத்தில் திருத்தம் கொண்டுவர நடவடிக்கை

(கொழும்பு)

தற்போது அமுலிலுள்ள பொதுச் சுகாதார சட்டமூலத்தில் திருத்தங்களைக் கொண்டுவருவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கையெடுத்துள்ளது.

சுற்றாடலைச் சுத்தமாக வைத்திராதோருக்கு எதிராக நடவடிக்கையெடுக்கும் பொருட்டு இந்தச் சட்டமூலத்தில் திருத்தங்கள் கொண்டுவரப்படவுள்ளதாகச் சுகாதார அமைச்சின் பதில் செயலாளர் நிஹால் ஜெயதிலக தெரிவித்தார்.

சுற்றாடலை மாசுபடுத்துபவர்களுக்கு எதிராக உடனுக்குடன் அபராதம் விதிக்கும் வகையில் சட்டம் கொண்டுவரும் நடவடிக்கை எடுக்கப்பட்ட போதிலும் அது சாத்தியப்படவில்லையென அவர் குறிப்பிட்டார்.

இந்நிலையில், பொதுச் சுகாதார சட்டமூலத்தில் திருத்தம் கொண்டு வருவதன்மூலம் இதனை நடைமுறைப் படுத்தமுடியுமென்று அவர் தெரிவித்தார்.

இதேவேளை மழைகாலங்களில் டெங்கு உட்பட மேலும் பல நோய்கள் பரவாமல் தடுக்க இந்த நடவடிக்கை உதவும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க-9)

# பொங்கல் விழா

(கற்கோவளம்)

பருத்தித்துறை - தும்பளை நெல்லண்டை பத்திரகாளி அம்மன் ஆலய வருடாந்த பொங்கல் விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி சனிக்கிழமை காலை நிறைவுபெறும்.

இவ்விழாவில் அடியார்கள் தம் நேர்த்திக்கடனை நிறைவேற்றும் பொருட்டு காவடி, கரகம், தூக்குக் காவடி போன்றவற்றை மேற்கொள்வர். (க-7-104)

# 2007 ஆம் ஆண்டு முதல் க.பொ.த.சா.த பரீட்சை முறைகளில் மாற்றங்கள்

## கல்வி அமைச்சு கொண்டுவரும்

(கொழும்பு)

கல்விப் பொதுத்தராதர சாதாரணப் பரீட்சை முறைகளில் எதிவரும் 2007ஆம் ஆண்டு முதல் மாற்றங்கள் செய்யப்பட விருப்பதாக கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

இதனடிப்படையில் பரீட்சார்த்திகள் 10 பாடங்களையும் எடுக்க வேண்டிய நிலையேற்படும்.

இந்தப் பத்துப் பாடங்களில் கணிதம், ஆங்கிலம், சமயம் மற்றும் பரீட்சார்த்திகளின் தாய்மொழி என்பன கட்டாய பாடங்களாக்கப்படும்.

அத்துடன் மேலும் இரு தொகுதி பாடவகைகளில் இருந்து 6 பாடங்களை மாணவர்கள் தெரிவு செய்யலாம்.

முதலாவது தொகுதியில் இரசாயனம், உயிரியல், பௌதிகவியல் மற்றும் வரலாறு, புவியியல் போன்ற பாடங்கள் உள்ளன.

இவற்றில் 4 பாடங்களைத் தெரிவு செய்து மாணவர்கள் பரீட்சைக்குத் தோற்ற வேண்டும்.

இரண்டாவது தொகுதியில் அழகியல், தொழில்நுட்பம் ஆகியவை தொடர்பான பாடங்களிலிருந்து தலா ஒவ்வொரு பாடததை மாணவர்கள் பரீட்சைக்காகத் தெரிவுசெய்யவேண்டும்.

தற்போதுள்ள சாதாரணதரப் பாடத்திட்டத்திற்கும் உயர்தர பாடத்திட்டத்திற்குமிடையே அதிக வேறுபாடு காணப்படுகிறது. உயர்தரப்பரீட்சைக்கு ஏற்றவாறு சாதாரணதர பாடத்திட்டம் காணப்படாததாலேயே புதிய பரீட்சைத்திட்டம் அமுலாக்கப்படவுள்ளதாக கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (க-7,9)

# மலேரியா நோய்க்குரிய சிகிச்சையும் தடுப்பு முறைகளும்

நுளம்புகள் மூலம் மக்களுக்குப் பரவும் நோய்களுள் முக்கியமானது மலேரியா. இது ஒரு தொற்றுநோய். வீட்டில் ஒருவருக்கு மலேரியா வந்தால் மற்றவர்களுக்கும் இது எளிதில் பரவிவிடும்.

மலேரியா ஓர் ஆபத்தான நோய் என்றால் அது மிகையல்ல. உலகமெங்கும் சுமார் 30 கோடி பேர்



ஆண்டுதோறும் இந்த நோயால் அவதிப்படுகிறார்கள். சுமார் 20 இலட்சம் பேர் ஒவ்வொரு ஆண்டும் மரணத்தின் பிடியைத் தழுவுகிறார்கள்.

## ஒட்டுண்ணிகள்

'பிளாஸ்மோடியம்' என்ற கண்ணுக்குத் தெரியாத ஒட்டுண்ணிக் கிருமிகள்தான் மலேரியாவுக்குக் காரணகர்த்தா.

இந்த ஒட்டுண்ணியில் நான்கு வகைகள் உள்ளன. அவை 1) பிளாஸ்மோடியம் வைவாக்ஸ் 2)பிளாஸ்மோடியம் பால்சிபேரம் மலேரியா 3) பிளாஸ்மோடியம் ஓவேல் 4) பிளாஸ்மோடியம் மலேரியா

## மலேரியா தோன்றும் விதம்

இந்த ஒட்டுண்ணிக் கிருமிகள் நுளம்பில் மட்டுமே இருக்கும். அதிலும் குறிப்பாக பெண் அனாபிலி நுளம்பில் மட்டுமே இருக்கும். இன்னும் சொல்லப் போனால், இந்த நுளம்புகளின் உமிழ் நீர்ப்பைகளில்தான் மலேரியா கிருமிகள் வாசம் செய்யும்.

நுளம்பு மனிதனைக் கடித்து, தோலில் மெல்லிய துளை போட்டு, இரத்தத்தை உறிஞ்சும்போது, நுளம்புகளின் உமிழ்நீர் வழியாக மலேரியா கிருமிகள் மனிதனின் உடம்புக்குள் புகுந்துகொள்கின்றன. பின்பு அவை இரத்தத்தில் கலந்து நேராகக் கல்லீரலுக்குச் சென்று குடியேறுகின்றன. அங்கு கிருமிகள் பல வளர்ச்சிக் கட்டங்களைத் தாண்டி பல்கிப் பெருகுகின்றன.

பின்னர் அங்கிருந்து இரத்த சிவப்பணுக்களுக்குத் தங்கள் இரப்பையை மாற்றிக் கொள்கின்றன. அப்போது கிருமிகள் சிவப்பணுக்களை அழிப்பதால் மலேரியா ஏற்படுகிறது.

## மலேரியா பரவும் விதம்

மலேரியா நோய் உள்ள ஒருவரின் இரத்தத்தில் இந்தக் கிருமிகள் லட்சக் கணக்கில் இருக்கும். நுளம்புகள் அந்த மனிதனுடைய இரத்தத்தை உறிஞ்சும் போது வயிற்றுக்கு இந்தக் கிருமிகள் இடம் பெயர்கின்றன.

நுளம்புகளின் வயிற்றில், மலேரியா கிருமிகள் இனப்பெருக்கம் செய்து, உமிழ் நீர்ச்சுரப்பிக்கு நகர்ந்து விடும். அடுத்த முறை அந்த நுளம்புகள் வேறொரு மனிதனைக் கடிக்கும்போது அவருக்கு மலேரியாக் கிருமிகளைத் தானம் செய்யும். இதனால் அவருக்கும் மலேரியா நோய் வரும்.

நுளம்புகள் தவிர, வேறு சில வழிகளிலும் ஒருவருக்கு மலேரியா வரலாம். அதாவது மலேரியா நோயுள்ள ஒருவரின் இரத்தத்தையோ அல்லது ஆறு மாதங்களுக்குள் மலேரியா வந்தவரின் இரத்தத்தையோ சரியாகப் பரிசோதிக்காமல் மற்றொருவருக்கு செலுத்திவிட்டால், இரத்தம் பெற்றுக் கொண்டவருக்கு மலேரியா வந்துவிடும்.

இதுபோல் நிறைமாதக் கர்ப்பிணிகளுக்கு மலேரியா வந்தால், பிறக்கும் குழந்தைக்கும் மலேரியா வரக்கூடும்.

## அறிகுறிகள்

மலேரியாவின் ஆரம்பத்தில் சோர்வு, பசிக்குறைவு, உடல்வலி, தலை வலி, வாந்தி ஏற்படும். இதைத் தொடர்ந்து காய்ச்சல் தோன்றும.

மலேரியாக் காய்ச்சலை மூன்று கட்டங்களாகப் பிரித்துச் சொன்னால் எளிதில் நோயை இனம் காண உதவும். முதல் கட்டத்தில் நோயாளிக்கு திடீரென்று கடுமையான குளிர் காய்ச்சல் வரும். உடம்பு முழுவதும் நடுங்கும், பற்கள் கடகடவென்று அடித்துக் கொள்ளும். உடனே பல போர்வைகளால் அவரைப் போர்த்திக் கொள்வார். இதை 'குளிர் நடுக்கக் கட்டம்' என்போம். இது சுமார் அரை மணி நேரம் நீடிக்கும்.

இதனைத் தொடர்ந்து காய்ச்சல் கடுமையாகும். 104 டிகிரி பாரன்ஹீட் அளவுக்கு மேல் வெப்பம் உயரும். உடம்பு அனலாய் கொதிக்கும். தோல் உலர்ந்து விடும். நோயாளி சில சமயங்களில் சுயநினைவின்றி உளறுவார். இதை 'வெப்பக் கட்டம்' என்கிறோம். இது ஆறு மணி நேரம் வரை நீடிக்கும்.

பின்பு மூன்றாவது கட்டம் துவங்கும். இதற்கு 'வியர்வைக் கட்டம்' என்று பெயர். இதில் உடம்பு முழுவதும் வியர்த்துக் கொட்டும். வெப்பம் தணியும். ஆனால் வாந்தியும், தலைவலியும் கடுமையாகும். அடுத்த சில மணி நேரங்களில் காய்ச்சல் குறைந்து விடும். நோயாளி எப்போதும் போல் சாதாரணமாகக் காணப்படுவார். வழக்கமான பணிகளில் ஈடுபடத் தொடங்கிவிடுவார்.

பொதுவாக இந்தக் காய்ச்சல் ஏற்பட்ட முதல் நாளிலேயே மருத்துவரைப் பார்த்து சிகிச்சை பெற்றுவிட்டால், மீண்டும் காய்ச்சல் திரும்பாது. தவறினால், மறுநாளோ, ஒருநாள் விட்டு ஒரு நாளோ அல்லது மூன்று, நான்கு நாட்களுக்கு ஒரு முறையோ சொல்லி வைத்த மாதிரி அதே நேரத்தில் மீண்டும் குளிர் காய்ச்சல் தொடங்கும்.

## சிகிச்சை

மலேரியாவைக் குணப்படுத்த குயினின், குளோரோகுயின், பிரிமாகுயின், கேமாகுயின், டாராபிரிம் மற்றும் பைரிமெத்தமினும் சல்பாடாக்ஸினும் கலந்த மாத்திரைகள் பயன்படுகின்றன. இவற்றில்

## மருத்துவ விளக்கம்

நோயாளியின் வயது, எடை, நோயின் தீவிரம் ஆகியவற்றைப் பொறுத்து அவருக்குத் தேவையான மருந்தை மருத்துவர் சிபாரிசு செய்வார். அதை மருத்துவர் கூறும் கால அளவுக்குத் தொடர்ந்து சாப்பிட வேண்டும். அப்போது தான் மலேரியா குணமாகும். மாத்திரை அளவைக் குறைத்தாலோ அல்லது விட்டுவிட்டு மாத்திரைகளைச் சாப்பிட்டாலோ மலேரியா குணமாகாது.

## மலேரியாவால் வரும் ஆபத்துகள்

ஒருவருக்கு அடிக்கடி மலேரியாக் காய்ச்சல் வந்தால் அவருக்கு இரத்த சோகை ஏற்படும். உடல் தளர்ச்சி அடையும். நோய் எதிர்ப்பு சக்தி குறையும். இந்த நோயை ஆரம்ப நிலையில் கவனிக்கத் தவறினால், இது மூளையைப் பாதிக்கும். 'மலேரியா மூளைக் காய்ச்சல்' ஏற்பட்டு உயிருக்கு ஆபத்தாக முடியும். இன்னும் சிலருக்கு சிறுநீரகங்கள் பாதிக்கப்பட்டு 'கறுப்புத் தண்ணீர்க் காய்ச்சல்' உண்டாகலாம். இதில் சிறுநீரில் இரத்தம் வெளியேறும். இதன் காரணமாகவும் நோயாளிக்கு ஆபத்து வரலாம். ஆகவே, மலேரியாவுக்கு ஆரம்பத்திலேயே சிகிசசை பெற்றுக்கொள்வது நல்லது.

## மலேரியாவைத் தடுப்பது எப்படி?

நுளம்புகளை ஒழிப்பதே மலேரியாவைத் தடுப்பதற்கு நாம் செய்யும் சிறந்த பணியாகும். இதற்கு நம் வீட்டைச் சுற்றி தண்ணீர், கழிவுநீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும். தினமும் சுத்தப்படுத்த வேண்டும் அல்லது மூடவேண்டும்.

வீட்டிற்கு அருகில் உள்ள குப்பைத் தொட்டிகள், தெருவில் கிடக்கும் தேங்காய் மூடிகள் இவற்றில் தண்ணீர் தேங்கினால் கூட நுளம்புகள் உற்பத்தியாகிவிடும். ஆகையால் அவற்றைச் சுத்தப் படுத்துவதிலும் கவனம் செலுத்த வேண்டும்.

வீட்டுச் சுவர்கள் மீது 'DDT' மருந்தைத் தெளித்தால் நுளம்புகள் வராது. தெருவோரச் சாக்கடைகளில் 'டெல் டா மெத்தரின்' மருந்தைத் தெளித்தால் நுளம்புகள் ஒழியும். ஜனநெருக்கடி மிகுந்த குடியிருப்புகளில் 1000 கன அடியுள்ள இடத்திற்கு 4 அவுன்ஸ் 'கிரிசாலை' புகைத்தால் நுளம்புகள் இறந்து போகும்.

நுளம்புக் கடியிலிருந்து தப்பிக்க நாம் எப்போதுமே நுளம்பு வலைக்குள் படுப்பது நல்லது. சாதாரணமாக இரவு ஒன்பது மணிக்கு மேல்தான் நுளம்பு வலையைக் கட்டுவது நம் வழக்கம். இதனால் நமக்குப் பலன் இல்லை. ஏற்கனவே படுக்கையில் பதுங்கியிருக்கும் நுளம்புகள் படுப்பவரைக் கடித்து மலேரியாவை உண்டு பண்ணும்.

**டாக்டர்**
**கு.கணேசன்**

பதிலாக மாலை 5 மணி படுக்கையில் நுளம்பு வலையைக் கட்டிவிட வேண்டும். காரணம் நுளம்புகள் பகல் நேரம் முடிந்து அந்த நேரம் ஆனதும்தான் தங்கள் இருப்பிடங்களான படுக்கைகள், வீட்டின் மூலை முடுக்குகள் ஆகியவற்றை வந்தடையும். ஆகவே அவை வருவதற்கு முன்பே மாலை ஐந்து மணிக்கு நுளம்பு வலையைக் கட்டிவிட்டால், நுளம்புகள் நம்மைக் கடிக்க வாய்ப்பில்லை.

நுளம்பு வலைக்குள் படுக்க சங்கடப்படுபவர்கள் நுளம்பு விரட்டி அல்லது நுளம்புவர்த்தியை உபயோகித்து நுளம்புக்கடியிலிருந்து தப்பித்துக் கொள்ளலாம்.

வியாபாரிகள், மருந்து விற்பனையாளர்கள், பொறியாளர்கள் ஆகியோர் அடிக்கடி வெவ்வேறு ஊர்களுக்குப் பயணம் செய்ய நேரலாம். அப்போது மலேரியா பரவியுள்ள ஊர்களுக்குச் செல்ல நேர்ந்தால், பயணத்திற்கு ஒரு வாரத்திற்கு முன்பே மலேரியா தடுப்பு மாத்திரைகளைச் சாப்பிட்டு விடவேண்டும். அப்போதுதான் அவர்களுக்கு மலேரியா வராது. □

# காலி அஹங்கம பிரதேசத்தில் மர்மமான புகை மண்டலம்!

(காலி)

காலி அஹுங்கம பிரதேசத்தில் கடந்த சனிக்கிழமை மர்மமான புகை மண்டலம் ஈரலிப்பான தரையிலிருந்து வெளிப்பட்டதை பிரதேச வாசிகள் அவதானித்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மர்மமான புகைமண்டலம் பூமியிலிருந்து கிளம்பியதையடுத்துத் தரைப்பகுதி மற்றும் நீர் நிலைகளில் வெப்பநிலை அதிகரித்துக் காணப்பட்டது என பிரதேச வாசிகள் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து அப்பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் தகவல் தெரிவிக்கையில், இப்பிரதேச மக்கள் கடற்பேரலையால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் தற்போது இம்மர்மப் புகை காரணமாக மக்கள் பெரும் பீதிக்குள்ளாகியுள்ளனர் என்றார்.

இது தொடர்பாக அதிகாரிகள் உரிய கவனம் செலுத்தவேண்டுமெனவும் மக்களுக்கு இதனால் எந்தவித பாதிப்பும் ஏற்படாதவாறு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் அப்பிரதேச மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (க-7-9)

# வீற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்படும்

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தால் இருவிற்பனை நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன.

புதுக்காட்டுச்சந்தியில் கருவாட்டு விற்பனை நிலையமும், கட்டைக்காட்டில் மீன் பதனிடலுடன் இணைந்த உப்பு விற்பனை நிலையமும் திறந்து வைக்கப்படவுள்ளது. கடந்த முதலாம் திகதி நடைபெற்ற சமாச நெறியாளர் கூட்டத்திலேயே இதற்கான தீர்மானம் எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (க-7-35)

# கடல் மாசுபடுவதைத் தடுக்க மக்களின் ஆதரவு அவசியம்

(கொழும்பு)

கடல் அசுத்தமடைவதைத் தடுப்பதற்கு பொதுமக்களின் ஆதரவைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென சமுத்திர வள பாதுகாப்பு அதிகார சபையின் தலைவர் ரஞ்சித் குணரத்ன தெரிவித்துள்ளார்.

குப்பைகளையும் ஏனைய அழுக்கடைந்த பொருட்களையும் கடலுக்குள் வீசுவதனால் சுற்றாடலுக்கு பாரிய அளவிலான அச்சுறுத்தல் ஏற்பட்டிருக்கின்றது.

இதன் காரணமாக கடல் வாழ் உயிரினங்களுக்கும் தாவரங்களுக்கும் கடல் படுக்கைக்கும் பெருமளவு சேதங்கள் ஏற்பட்டுள்ளன.

அதேசமயத்தில் கடல் பேரலை அனர்த்தம் காரணமாக கடல்படுக்கையும் கடலினுள் இருக்கும் முருகைக்கற் பாறைகளும் பெருமளவு சேதம் அடைந்துள்ளன.

இதனால் ஆழ்கடல் படுக்கை சுத்திகரிப்பதற்கென பல்கலைக் கழக மற்றும் பாடசாலை மாணவர்களினதும் தனியார்துறை ஊழியர்களினதும், சுழியோடிப் பயிற்சி நிலையப் பிரதிநிதிகளினதும் உதவிகள் பெற்றுக்கொள்ளப்படும்.

இதற்காக அரசாங்கம் 70 இலட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளது. கரையோரப் பகுதிகளில் வாழும் மாணவர்கள் மத்தியில் இந்த விடயம் தொடர்பாக விழிப்புணர்ச்சி ஏற்படுத்துவதற்கும் அதிகாரசபை நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளது. (க-5)

## இன்று ஒரு தகவல்

# பொய்

“எனக்கு பொய்யே பேசத்தெரியாது” என்று என்னிடம் வந்து சொன்னார் ஒருவர். “அவரது வாழ்க்கையில் அவர் சொல்லும் மிகப் பெரிய பொய் அதுதான்” என்ற உண்மை எனக்குத் தெரியும். பொய் பேசுவதை ஒரு கலையாகவே செய்து வருபவர் அவர்.

பொய்யில் எத்தனை வகை இருக்கிறது? அது எந்தெந்த இடத்தில் எப்படியெல்லாம் உபயோகப் படுகி றது? என்பவற்றைப் பற்றியெல்லாம் அவர் ஏற்கனவே என்னிடம் விலாவாரியாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்.

ஏனெனில் அதில் அவர் நிபுணர். அதனால் அவர் சொல்கின்ற விபரத்தை நாமும் தெரிந்து வைத்திருப்பது நல்லது.

முகஸ்துதி என்று சொல்கின்றோமே அது ஒரு வகை யான பொய். ஒரு பெரிய மனிதரிடம் போய் காரியம் சாதிக்க வேண்டியிருக்கிறது என்ன செய்கின்றோம்?

“உன்னைப் போல யாரும் உண்டா? ஆகா ஓகோ..” என்று புகழ ஆரம்பித்து விடுகின்றோம். கர்ணனுடைய மறு அவதாரம் நீங்கள் தான் என்கிறோம். உடனே அவரும் கையில் கிடைத்ததை அள்ளிக் கொடுத்து விடுகின் றார்.முகஸ்துதியிலே உள்ள ஒரு “சைக்கொலஜி” என்ன தெரியுமா? செய்வது முகஸ்துதி தான் என்பது கேட்பவர்களுக்கு நன்றாகவே தெரியும். இருந்தாலும் மனதுக்கு அதைக் கேட்கும் போது மிகவும் சந்தோஷமாக இருக்கும். இது மனித இனத்தின் பலவீனம்!

மற்றவர்களைப் புகழ்வதற்குப் பெயர் முகஸ்துதி. நம்மை நாமே புகழ்வதற்குப் பெயர் தற்புகழ்ச்சி. அதுவும் ஒருவகை பொய்தான். ஏன் தெரியுமா? எம்மிடம் உள்ள குறைகளை மறைத்து நிறைகளை மிகைப்படுத்திப் பேசுகின்றோம். இதனால் மற்றவர்களுக்கு எமது சுயரூபம் தெரிவதில்லை...! மறைத்து விடுகின்றோம் இதுவும் பொய்தானே.

“சாக்குப்போக்கு” சொல்கிறார்களே அதுவும் பொய் யில் ஒரு ரகம். பல வேளைகளில் எமது கடமையை நாம் ஒழுங்காகச் செய்வதில்லை. கொடுத்த வாக்குறு தியை நிறைவேற்று வதில்லை. அந்த வேளைகளில் எமது தவறை மறைப்பதற் காக பொய் சொல்கின்றோம். அவ்வேளையில் அதற்குப் பெயர் சாக்குப்போக்கு.

“வீண் பேச்சு” என்று சொல்வோமே அதுவும் பொய் யிலே ஒரு வகைதான். ஏதோ பொழுது போக வேண்டும் என்பதற்காக இல்லாததையும் பொல்லாததையும் பேசிக் கொண்டிருக்கின்றோம். அதில் பொய்க் கலப்பு அதிக மாக இருக்கிறது.

“அவதூறு” என்று சொல்கின்றோமே அதுவும் ஒருவகை யான பொய்தான். மற்றவர்களது புகழைக் கெடுப்பது போல்,நிம்மதியைக் கெடுப்பது போல் நாம் பேசுகின் றோமே அதற்குப் பெயர் தான் அவதூறு.

“அவன் என்ன பெரிதாக சாதித்து விட்டான். நான் சாதிக்காத சாதனையா? என்று பேசுவார்கள் எத்தனை பேர்?”

பொய்யிலே மிகவும் உறுதியான ஒரு வகைப் பொய் இருக்கிறது. அதுதான் பொய்ச்சாட்சி. இது மிகவும் மோசமான பொய். பொய் மற்றவர்கள் வாழ்க்கையை மிகவும் மோசமாகப் பாதிக்கக்கூடியது இந்தப் பொய்.

ஒரு நீதிமன்றத்தில் நின்றுகொண்டு நடந்ததை நடக்கவில்லை என்றும் நடக்காததை நடந்ததென்றும் சொல்வது எவ்வளவுக்கு எவ்வளவு பெரிய மோசம்.

யாருக்கும் கெடுதல் இல்லாமல் ஒரு நல்லது நடக் கும் என்பதற்காக பொய் சொல்லலாம் என்கிறார் திருவள் ளுவர். அந்தப் பொய் உண்மைக்குச் சமனானது. ஒரு வேதாந்தியைப் பார்த்து “இந்த உலகத்திலேயே பெரிய பொய் எது?” என்று கேட்டார். பொய்யான இந்த உடம் புக்கு “மெய்” என்று பெயர் வைத்திருக்கின்றோமே.... அது எவ்வளவு பெரிய பொய்? அப்படி என்றார் அவர்.

“பொய் சொல்லும் வாய்க்கு போசனம் கிடைக்காது என்று ஒரு பழமொழி! இந்தப் பழமொழியிலே எனக்கு நம்பிக்கை இல்லை என்றார் ஒரு குடும்பத் தலைவர்.

“பொய் சொல்கிற வாய்க்குத் தான் போசனம் கிடைக் கும். என் மனைவியைப் பார்த்து நீ ரொம்ப அழகாக இருக் கிறாய் என்று தினமும் சொல்கிறேன். அதனால்தான் சர் எனக்குத் தினமும் போசனம் கிடைத்துக் கொண்டிருக்கிறது” என்று அதற்கு விளக்கமும் கொடுத்தார். இவரை என்னவென்று சொல்வது?

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நியமனம்

(யாழ்ப்பாணம்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராக திருமதி ரூபினி வரதலிங்கம் நேற்றுப் புதிதாகக் கடமையேற்றுள்ளார். இதுவரை காலமும் சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராக இருந்த சுப்பிரமணிய சர்மா பதவி உயர்வு பெற்றுச் செல்வதையடுத்து வடக்கு-கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சின் உதவிச் செயலாளராக இருந்த திருமதி ரூபினி வரதலிங்கம் தற்போது சண்டிலிப்பாய் பிரதேச செயலாளராகக் கடமையேற்றுள்ளார். (ந-19)

# திடீரென உள்வாங்கியது நிலம்!

# தூத்துக்குடியில் மக்கள் பீதி

(தூத்துக்குடி)

தூத்துக்குடி அருகே நிலம் திடீரென உள்வாங்கியதால் நிலத்தில் பெரிய குழி ஏற்பட்டது. இதனால் மக்கள் பீதி அடைந்துள்ளனர். சுனாமிக்குப் பிறகு தூத்துக்குடி மாவட்ட கடல்மட்டத்தில் அடிக்கடி மாற்றம் ஏற்பட்டு வருகிறது.

கடல் திடீரென பல அடி உள்வாங்குதல்,கொந்தளித்தல்,கடல் மட்டம் உயர்தல் ஆகியன அடிக்கடி நடக்கின்றன. நெல்லை தூத்துக்குடி மாவட்ட நீர்ப்



பரப்புகளிலும் மாற்றம் ஏற்பட்டு நீர்க் குமிழ்கள் வந்தன. அதன் தொடர்ச்சியாக நிலப் பரப்பிலும் மாற்றம் ஏற்படத் தொடங்கியுள்ளது.

தூத்துக்குடி அருகே உள்ள பேரூரணியில் டி.டி.டி.ஏ. நடுநிலைப்பள்ளி எதிரே உள்ள நிலப் பரப்பில் மாணவர்கள் சனிக்கிழமை மாலை கிரிக்கெற் விளையாடிக்கொண்டிருந்தனர்.பந்து ஓர் இடத்தில் போய் விழுந்தது. பந்தை எடுக்க நிலத்தில் கால் வைத்த போது நிலம் திடீரென உள்வாங்கத்துவங்கியது. 3 அடி சுற்றளவு கொண்ட குழி ஏற்பட்டது. பந்தை எடுக்கச் சென்றவர் குழிக்குள் விழுந்தார். அலறியபடி வெளியே வந்த அவர் நண்பர்களிடம் நடந்ததைக் கூறினார். ஊர்ப் பெரியவர்கள் குழியைப் பார்த்தனர். குழியின் ஆழம் அதிகமாகிக் கொண்டே போனது. குழிக்குள் கம்பி விடப்பட்டு அதன் ஆழம் கண்டறியப்பட்டது.

இறுதியில் குழியின் வெளிச்சுற்றளவு 3அடி அகலமாகவும் உள் சுற்றளவு 5 அடி அகலமாகவும் குழியின் மொத்த ஆழம் 6 அடியாகவும் இருந்தது. குழிக்குப் பக்கவாட்டில் பாதை செல்வது போன்றும் காணப்பட்டது. நேற்று முன்தினம் காலை நிலப்பரப்பில் இருந்த மண் திடீரென சரிந்து குழிக்குள் விழுந்தது. இம்மாற்றம் குறித்து மாவட்ட நிர்வாகத்திற்குத் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடலைத் தொடர்ந்து நிலமும் உள்வாங்கத் துவங்கியுள்ளதால் மக்கள் பீதியில் உள்ளனர். நிலப் பரப்பில் மாற்றம் ஏற்பட்டது குறித்து தூத்துக்குடி வ.உ.சி. கல்லூரி மண்ணியல்துறைத் தலைவர் பேராசிரியர் ராமானுஜம் தெரிவிக்கையில், பேரூரணி நிலத்தின் அடிப்பகுதி பாறைகளால் ஆனது. டிசம்பர் 26 இல் இந்தோனேஷியாவில் ஏற்பட்ட பூகம்பத்தைத் தொடர்ந்து அப் பாறைகளில் விரிசல் ஏற்பட்டிருக்கக் கூடும். ஆனால் மாற்றம் உடனடியாக நிகழவில்லை. அப்பகுதியில் சமீபத்தில் பெய்த மழையால் மண்ணரிப்பு ஏற்பட்டு மழைநீர் பாறைகளின் விரிசல்களுக்கிடையே சென்றிருக்கக் கூடும். அதனால் நிலம் உள்வாங்கியிருக்கலாம்.ஆனால் நிலத்தை ஆராய்ந்த பின்னரே எதையும் உறுதிப்படுத்த முடியும். இதனால் பூகம்பம் ஏற்படும் என மக்கள் பீதியடையத் தேவையில்லை என்றார். (ற)

# பெண்போராளிகளின் பிரச்சினைகளை பெண் எழுத்தாளர்களே உணர முடியும்

## -போராளிக் கவிஞர் மலைமகள்

(கொழும்பு)

பெண் போராளிகள் யுத்த களத்தில் எதிர்நோக்கும் பிரச்சினைகளை பெண் எழுத்தாளர்களாலேயே புரிந்துகொள்ள முடியும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த போராளிக் கவிஞர் மலைமகள் தெரிவித்துள்ளார்.

ஐரோப்பிய நாடுகளுக்கு கலைப் பயணத்தை மேற்கொண்டிருந்த தாயகக் கலைஞர்களுக்கான வரவேற்பு நிகழ்ச்சி சுவிஸ் பேர்ண் தமிழர் இல்லத்தில் உள்ள சுவிஸ் ஐ.பி.சி கலையகத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்,

வீட்டுப்பணிகளோடு நின்ற பெண்கள் மத்தியில் விடுதலைப் போராட்டம் பற்றிய அதிர்வை ஏற்படுத்தியவர் தேசியத் தலைவரே.

முப்பது வருடகால வரலாற்றைக் கொண்ட விடுதலைப் புலிகள் அமைப்பில் பெண்கள் நேரடியாக ஈடுபடுத்தப்பட்டு இருபது வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளன.

இருபது வருடங்களுக்கு முன்னர் யாழ். மாவட்டத்தில் அரசியல் பொறுப்பாளராக திலீபனும், யாழ். மாவட்ட தளபதியாக கிட்டுவும் பணியாற்றிக் கொண்டிருந்த வேளையில் தேசியத் தலைவரின் ஆலோசனையின் பேரில் முற்போக்கான பெண்கள் சிலரை தேர்ந்தெடுத்து சுதந்திரப்பறவைகளமைப்பு உருவாக்கப்பட்டது. இதன்மூலம் விடுதலைப் போராட்டம் பற்றிப் பெண்கள் மத்தியில் முற்போக்கான கருத்தியல் உருவாக்கப்பட்டது.

யுத்த களத்தில் ஆண் போராளிகளை விட பெண் போராளிகள் எதிர்நோக்கும் நெருக்கடிகள், பிரச்சினைகள் வித்தியாசமானவை. அவற்றை பெண்களாலேயே புரிந்துகொள்ள முடியும்.

ஆரம்ப காலத்தில் ஆண் எழுத்தாளர்களே பெண் போராளிகள் பற்றி எழுதி வந்தனர். அவர்களால் பெண் போராளிகளின் உண்மையான நெருக்கடிகளை வெளிக்கொணர முடியவில்லை. இப்போது பெண் போராளிக் கவிஞர்களும் எழுத் தாளர்களும் அவர்களின் நெருக்கடிகளை, பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்திருக்கிறார்கள் எனத் தெரிவித்தார். (ந-4)

# அதிசயக் குழந்தை



காஷ்மீர் அனந்த்நாக் மாவட்டத்தில் உடலும் தலையும் ஒட்டிய நிலையில் ‘சயாமி’ இரட்டைக் குழந்தைகள் பிறந்துள்ளன. இந்த அதிசயத்தை அப்பகுதி மக்கள் அனைவரும் ஆவலோடு சென்று பார்த்து வருகின்றனர்.

காஷ்மீர் அனந்த்நாக் மாவட்டம் சங்கன்ஸ் கிராமத்தில் பெண் ஒருவருக்கு “சயாமி” இரட்டைக் குழந்தை பிறந்தது. மகிழ்ச்சி கொள்ளவேண்டிய தாய் மனம் வெதும்பினார்.

காரணம், இரு குழந்தைகளின் உடலும் தலையும் ஒட்டிய நிலையில் பிறந்துள்ளன.

குழந்தையைப் பார்த்துவிட்டு வெளியே வந்த சிறுவன் ஒருவன் நான்கு கண்கள், நான்கு காது, இரண்டுவாய், இரண்டு தொண்டையுடன் ஒரு பையன் பிறந்துள்ளான் என வர்ணித்தான். இதுகுறித்து டாக்டர்கள் கூறுகையில்,

தாயின் கருப்பையிலேயே இரு கருமுட்டைகள் உருவாகி இருந்திருக்கலாம். ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளின் வளர்ச்சி போதுமானதாக இருக்காது என்றனர்.

தற்போது குழந்தைகள் காஷ்மீர் மருத்துவ அறிவியல் கழகத்தில் அனுமதிக்கப்பட்டுள்ளன. (ற)

## பனி உருகியதால் பாதைகள் திறந்தன!

# இந்தியாவுக்குள் ஊடுருவத் தயாராக எல்லையில் 2500 தீவிரவாதிகள்

(ஸ்ரீநகர்)

எல்லையில் பனி உருகியதால் பாதைகள் திறந்தன. அதைத்தொடர்ந்து இந்தியாவிற்குள் ஊடுருவ 2500 தீவிரவாதிகள் தயாராக இருப்பதாக இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை புலனாய்வுத் தலைவர் அதிர்சசித் தகவலை வெளியிட்டுள்ளார்.

இந்திய எல்லைப் பாதுகாப்புப் படை புலனாய்வு பிரிவுத் தலைவர் கே.சீனிவாசன் கூறியதாவது,

பாகிஸ்தானில் இருந்து இந்தியாவுக்குள் தீவிரவாதிகள் ஊடுருவும் வழிகள் இதுவரை பனியால் மூடப்பட்டு இருந்தன. இப்போது கோடை தொடங்கியதைத் தொடந்து பனி உருகிப் பெரும்பாலான பாதைகள் தீவிரவாதிகளுக்கு வசதியாகத திறந்தே கிடக்கின்றன.

எல்லைக்கு அப்பால் பாகிஸ்தான் பகுதியில் 2500 தீவிரவாதிகளுக்கு ஆயுதப் பயிற்சி அளிக்கப்பட்டுவருகிறது. அவர்களில் பாகிஸ்தானியர் ஆக்கிரமிபபு காஷ்மரை சேர்ந்தவர்கள பாகிஸ்தானில் வசிக்கும் காஷ்மீரிகள் உள்ளனர். பனி உருகி பாதைகள் திறந்ததால் அவர்களில் 400 பேர் முதல் கட்டமாக இந்தியாவுக்குள ஊடுருவ எல்லையில் தயாராகவுள்ளனர். அவர்களைத் தொடர்ந்து மற்ற தீவிரவாதிகள், அணி அணியாக அனுப்பி வைக்கப்படுவார்கள்.

அவர்கள் ஊடுருவலைத் தடுக்க எல்லைப் பாதுகாப்புப் படையும், இராணுவமும் முழு உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் விழிப்புடன் இருந்ததால் பாராமுல்லா, குப்வாரா பூஞ்ச் பகுதியில் 10 ஊடுருவல் முயற்சிகள் இதுவரை முறியடிக்கப்பட்டன. ஊடுருவிய 36 தீவிரவாதிகள் சுட்டுக்கொலலப்பட்டதுடன் அவர்களிடம் இருந்து ஏராளமான ஆயுதங்களும் கைப்பற்றப்பட்டன.

பாதுகாப்புப் படையினர் முழு உஷார் நிலையையும் மீறி பூஞ்ச் பகுதியில் 25 தீவிரவாதிகள் கடந்த மார்ச மாதம் ஊடுருவினர்.

தீவிரவாதிகளிடம் போதிய ஆயுதங்கள் இல்லை. அவர்கள் ஆயுதம் அனுப்பச் சொல்லி அனுப்பிய செய்திகளை எல்லைப பாதுகாப்புப் படையினர் வழிமறித்து ஒட்டுக் கேட்டனர். தீவிரவாதிகள் குழுக்களில் சில தளபதிகளையும் மாற்ற கோரியுள்ளனர்.

பாதுகாப்புப் படையினர் விழிப்புடன் இருப்பதால் தீவிரவாதிகளுககு அவர்களின் தலைமை ஆயுத சப்ளை செய்ய முடியவில்லை.

பாராமுல்லா, குப்வாரா பூஞ்ச் பகுதி வழியாகவே தீவிரவாதிகள் ஊடுருவ முயற்சிக்கிறார்கள். கடந்த 2003 ஆம் ஆண்டுக்குப் பிறகு தீவிரவாதிகள் ஊடுருவல குறைந்திருக்கிறது. அந்த ஆண்டு 950 தீவிரவாதிகள் ஊடுருவினார்கள். கடந்த ஆண்டு 450 தீவிரவாதிகள் தான் ஊடுருவினார்கள்.

சமீபத்தில் சில தீவிரவாதத் தளபதிகளைச் சுட்டுக்கொன்றது இந்திய பாதுகாப்பு படைக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாகும் இவ்வாறு கூறினார். (ற)

WORLD NEWS உலக தரிசனம்

# டோக்கியோவில் நிலநடுக்கம்

(டோக்கியோ)

ஜப்பானில் டோக்கியோவில் கடந்த சனிக்கிழமை அதிகாலையில் லேசான நிலநடுக்கம் ஏற்பட்டது.

இது ரிக்டர் அளவுகோலில் 4.3 எனப் பதிவாகி இருந்தது. உயிருக்கோ உடமைக்கோ சேதம் ஏற்பட்டதாகத் தகவல் இல்லை.

ஜப்பானில் ஆண்டுதோறும் ஆயிரக்கணக்கான முறை நிலநடுக்கம் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ற)

# முகர்ஜி கமிஷனுக்கான கால அவகாசம் நீடிப்பு

(நாக்பூர்)

சுபாஷ் சந்திரபோஸின் மரணம் குறித்து விசாரிக்கும் முகர்ஜி கமிஷனின் கால அவகாசம் நீடிக்கப்பட்டுள்ளது.

சுதந்திரப் போராட்டத் தலைவர் சுபாஷ் சந்திரபோஸின் மர்ம மரணம் குறித்து முகர்ஜி கமிஷன் விசாரித்து வருகிறது. இந்தக் கமிஷனின் கால அவகாசம் எதிர்வரும் 14ஆம் திகதியுடன் முடிவடைகிறது. இதன் கால அவகாசத்தை நீடிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. ஆனால், அந்த மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

இந்நிலையில் முகர்ஜி கமிஷனின் கால அவகாசத்தை மத்திய அரசு நீடிக்கும் என்ற பார்வர்டு பிளாக் கட்சி எம்பி சுபாபோஸ் நிருபர்களிடம் தெரிவித்தார். (ற)

# புஷ் கையில் வெடிமருந்தாம்! நெதர்லாந்தில் ஆர்ப்பாட்டம்

(மாஸ்டிரிட்ச்ட்)

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் நேற்றுமுன்தினம் நெதர்லாந்துக்கு வருகை தந்தார். இவரது வருகையை எதிர்த்து அந்நாட்டில் சில நகரங்களில் போராட்டங்கள் நடந்தன. 'அதிபர் புஷ் கையில் கொண்டு வரும் சூட்கேசை நாங்கள் பார்க்க வேண்டும். அதனால் எங்களை ஹோட்டலுக்குள் அனுமதிக்கவேண்டும்' என அடம்பிடித்த போராட்டக்காரர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

இரண்டாம் உலகப் போரில் இறந்த அமெரிக்க வீரர்களின் கல்லறைகள், தெற்கு நெதர்லாந்துப் பகுதியல் உள்ளன. இறந்த வீரர்களுக்கு அஞ்சலி செலுத்துவதற்காக அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ நெதர்லாந்துக்குச் சென்றார். அவரது வருகையை எதிர்த்து டச்சுக்காரர்கள நேற்றுமுன்தினம் பேராட்டத்தில் ஈடுபட்டனர். ஆம்ஸ்டாடாம மறறும் மாஸ்டிரிட்சட ஆகிய இடங்களில் போராட்டங்கள் நடந்தன.

இது குறித்து போராட்டக் குழுவின் தலைவர் லியோடி குரூட் என்பவர் கூறுகையில்,

அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் தான் தங்கும் நெதர்லாந்து ஹோட்டலுக்கு கையில் ஒரு சூட்கேசுடன் வருகிறார். அந்த சூட்கேசில் பயங்கரமான அணு ஆயதங்கள் இருக்கின்றன. அந்த சூட்கேசில இருக்கும் ஒரு சிவப்புநிறப் பொததானை அழுத்தினால் போதும், பயங்கர வெடி விபத்து ஏற்படும் என்ற செய்தி எங்களுக்குக் கிடைத்தது. இதைக் கேட்ட நாங்கள் பயங்கர அதிர்ச்சி அடைந்தோம் என்றார்.

அதிபர் புஷ் தங்கியிருந்த ஹோட்டலுககுள் நுழைய முயன்ற ஆறு போராட்டக்காரர்களைப் பொலிஸார் கைதுசெய்தனர். அவர்களிடம் இருந்து பைனாகுலர் கைப்பற்றப்பட்டது. அவர்கள் தோற்றத்தில் சிட்டிசன் இன்ஸ்பெக்டர்கள் போலவே இருந்தனர். சர்வதேச அணு ஆயுதக் கழகத்தைச் சோந்த ஆயுத கண்காணிப்பாளர் போல் நடித்து, புஷ் தங்கியிருந்த ஹோட்டலுக்குள் செல்ல முயன்ற ஒருவரையும் டச்சு இராணுவ வீரர்கள் கைது செய்தனர். (ற)

# சமிக்ஞைகளை அனுப்பியது இந்திய செயற்கைக்கோள்

(பெங்களூர்)

சமீபத்தில் இந்தியாவிலிருந்து செலுத்தப்பட்ட காாட்டோசாட் - 1 செயற்கைக் கோள் செயல்படத் தொடங்கியுள்ளது.

சென்னையை அடுத்த ஸ்ரீஹரிகோட்டாவில் இருந்து அண்மையில 2 செயற்கைக் கோள்கள் ஒரே ஏவுகணை மூலம் விண்ணில் செலுத்தப்பட்டமை தெரிந்ததே.

இதில் கார்ட்டோசாட் -1 என்ற செயற்கைக்கோள் நேற்றுமுன்தினம் பெங்களூர் இஸ்ரோ மையத்திற்கு சமிக்ஞைகளை அனுப்பத் தொடங்கியது.

அடுத்த 6 வாரத்திற்குள் செயற்கைக் கோள் முழுமையாகச் செயல்படத் தொடங்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

## சூடுபிடிக்கும் தமிழக இடைத்தேர்தல்கள்

# வன்முறையில் ஈடுபடுபவர்களை கண்ட இடத்தில் சுட உத்தரவு

கும்மிடிபபூண்டித் தொகுதி சட்டமன்ற எற்பாடுகள் குறித்து திருவள்ளுவர் மாவட்ட ஆட்சியர் தங்கசாமி செய்தியாளர்களிடம் பேசுகையில், தொகுதிகளில் மொத்தமுள்ள 196 வாக்குச் சாவடிகளில் வாக்கில் பதவியின்போது வீடியோ படம் எடுக்கப்படுமென்றார். இதுவரை இத்தொகுதியில் சந்தேகத்துக்குரிய வகையில நடமாடிய 295 பேரைக் கைதுசெய்திருப்பதாகவும் தெரிவித்தார்.

இத்தேர்தல் பாதுகாப்புக்காக 2500 பொலிஸார் ஈடுபடுத்தபபட்டிருக்கிறார்கள். இதுதவிர மத்திய ரிசேவ் படையிலிருந்து நாலு பட்டாலியன் வந்திருக்கிறது.

தேர்தலின்போது வன்முறையில் ஈடுபடுபவர்களைக் கண்டதும் சுட உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாகவும் அவர் கூறினார். இந்நிலையில் இத்தொகுதியிலுள்ள பன்பாக்கம், புதுவாயிலி, கீழ் முதலம் மேடு உள்ளிட்ட பல ஊர்களில் ஏராளமான போலிவாக்காளர்கள் சேர்க்கப்பட்டுள்ளதாகப் புகார் எழுந்துள்ளது. கும்முடிப்பூண்டி ஊராட்சி மன்றத்துக்குட்பட்ட பன்பாக்கம் என்ற கிராமத்தில் 999 என்ற கதவிலக்கமே இல்லை. அந்த கிராமத்திலே 174 வாக்காளர்களை அந்த 999 என்ற கதவிலகத்தில் சேர்த்திருக்கிறார்கள். இதில 64 வாக்காளர்களை கடைசிப் பட்டியலில் நீக்கிவிட்டு 110 போலிவாக்காளர்களை சேர்த்திருக்கிறார்கள்.

கதவிலக்கமே இல்லாத ஒரு வீட்டில் 174 போலி வாக்காளர்கள் சேர்க்கப்படடிருக்கிறார்கள் என்றால், தொகுதி முழுவதிலும் சேர்க்கபபட்டுள்ள போலி வாக்காளர்கள் தொகை எவ்வளவு இருக்கும் என சந்தேகமெழுப்புகிறார்கள். பொது



மக்கள் இது மாதிரி தொகுதி முழுவதும் 20 ஆயிரம் போலிவாக்காளர்களைச் சேர்த்திருப்பதாகவும் தெரிகிறது.

இதனிடையே காஞ்சிபுரம் தேர்தல் தொகுதியில் தேர்தல் பணியல் ஈடுபடுத்தப்படும் மத்திய அரசாங்க ஊழியர்களுக்கு வாக்குப்பதிவு இயந்திரம் உள்ளிடடவை தொடர்பாகப் பயிற்சியளிக்கும் பணி நேற்றுமுன்தினம் ஆரம்பமானது. 3 நாட்கள் நடைபெறும் இப் பயிற்சியில் 900 ஊழியாகள் பயிற்சி பெறுகிறார்கள. (து)

# பதவியிலிருந்து விலகுமாறு ரொனி பிளேயருக்கு வற்புறுத்து

(இலண்டன்)

தேர்தலில் வெற்றி பெற்றபோதும், அறுதிப் பெரும்பான்மையைப் பெறத்தவறியதற்காகவும், வாக்கு சதவீதத்தை 161 லருந்து 67 ஆக குறைத்துப் பெற்றதற்காகவும் பிரதமர் ரொனி பிளேயர் பதவி விலக வேண்டுமென அவரது சொந்தக் கட்சியான தொழிலாளர் கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

முன்னாள் சுகாதார அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான பிராங் டொப்சன் உட்பட பல நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தலில் சிறந்த வெற்றியைப் பெறத் தவறியதற்காக ரொனி பிளேயர் பதவி விலக வேண்டுமென வற்புறுத்தியுள்ளனர்.

அதிருப்தியாளர்களின் இக்கோரிக்கையினை ஏற்க முடியாதென ரொனி பிளேயரின் அலுவலகத்திலிருந்து மறுப்பு வெளியிடப்பட்டுள்ளது. பிளேயர் தனது ஆட்சிக்காலத்தை முழுமையாக நிறைவு செய்வார் எனவும் அம்மறுப்பு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ஆனால் எப்படியும் பிளேயர் பதவி விலகியே ஆக வேண்டும் என்றும் அதை இப்போதே செய்வது நலம் பயக்கும் எனவும் முன்னாள் சுகாதார அமைச்சர் தெரிவித்துள்ளார்.

ரொனி பிளேயரை வைத்துககொண்டு இனி எதிர்காலத்தில் எந்த நம்பிக்கையில் தேர்தலில் போட்டியிட முடியும் எனவும் அதிருப்தியாளர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ற)

# பாக்.இற்கு நவீன ஏவுகணைகளை வழங்குவதற்கு அமெரிக்கா திட்டம்

(வோஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா பல கோடி டொலர் மதிப்புள்ள நவீன ஏவுகணைகளை வழங்கத் திட்டமிட்டுள்ளது. இதில் 40 ஏவுகணைகள் விமானத்திலிருந்து ஏவப்படும் ஏவுகணைகள். இவை முக்கிய இலக்குகளைக குறி தவறாமல் தாக்கும் ஆற்றல் உள்ளவை.

இவை தவிர, கப்பலில் இருந்து பறந்து சென்று எதிரியின் கப்பல்களைத் தகர்க்கும் ஹால்போக் ஏவுகணைகளையும் பாகிஸ்தானுக்கு அமெரிக்கா விற்க முடிவு செய்துள்ளது. இது போன்ற 20 ஏவுகணைகள் பாகிஸ்தானுக்குத் தரப்படவுள்ளன.

அமெரிக்க நாடாளுமன்றத்தில் இதற்கான ஒப்புதல் பெறப்பட்ட பிறகு ஆயுதங்கள் ஒப்படைக்கப்படும் எனத் தெரிகிறது. (ற)

இனம்போன்று இனமல்லார் கேண்மை மகளிர்
மனம்போல வேறு படும் - குறள்.

வலம்புரி

# இறுக்கத்துக்குள் பொதுக்கட்டமைப்பு

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான பொதுக்கட்டமைப்பு விவகாரம் ஊதிப்பருத்து இடியப்பச் சிக்கலாகி இறுக்கமடைந்திருக்கிறது. எல்லாத் தரப்பிலும் பொதுக் கட்டமைப்புப் பற்றியே பேச்சு. எனினும் கட்டமைப்பு பேச்சோடு மாத்திரமே. செயல்வடிவில் துளியளவும் நகர்வில்லை.

தேசத்தின் ஆழிப்பேரலை மீள்கட்டுமானப் புனரமைப்புக்கு, அரசுக்கும் - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே பொதுக்கட்டமைப்பு அவசியம் என்பது முடிந்தமுடிபாகவுள்ளது. எனினும் தென்னிலங்கையின் ஆளும் அதிகார வர்க்கத்திற்கு பொதுக் கட்டமைப்பை உருவாக்கி தமிழீழ விடுதலைப் புலிகளோடு இணைந்து புனரமைப்பு மீள்கட்டுமானப் பணியில் ஈடுபட அறவே விருப்பமில்லை.

ஆனால் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகள் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்பட்டாலே இலங்கைக்கு ஆழிப்பேரலை அனர்த்த நிதியுதவி வழங்கப்படுமென்று உறுதியாக அறிவித்துவிட்டன. உதவி வழங்கும் உலகநாடுகளின் உறுதியான முடிவினால் நிலைகுலைந்துபோயிருக்கும் ஆளும்வர்க்கம் விரும்பியோ, விரும்பாமலோ பொதுக்கட்டமைப்பினை உருவாக்கினால்தான் வெளிநாட்டு நிதியை பெருமளவில் அள்ளிக்கொள்ளலாம் என்ற நிலைமையை உணர்ந்துள்ளன.

இதன்காரணமாக கூட்டமைப்பு அரசின் தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் தான் அதிக சிரத்தையுடன் இருப்பதாக தாஜா பண்ணுகிறார். வெளிநாட்டு நிதியைக் கவர்ந்துகொள்ள பொதுக்கட்டமைப்பு நாடகத்தை அரங்கில் ஏற்ற அவர் படாதபாடுபடுகிறார்.

ஆனால் கூட்டமைப்பு அரசின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பி மற்றும் பௌத்த பிக்குகள் முன்னணி, ஹெலஉறுமய போன்ற இனவாதச் சிந்தனையாளர்கள் தமிழர்களுடன் பொதுக்கட்டமைப்பா? உயிரைவிடுவோமென வர்ணம் காட்டுகின்றனர்.

வெளிநாட்டு நிதியைக் கவர ஜனாதிபதி திட்டமிட்டாலும், இனவாதத்தில் திளைத்திருக்கும் பங்காளிகள் அதற்கு இணங்குவதாகத் தெரியவில்லை. இதனால் அரசாங்கமே குழப்பமடைந்து என்ன முடிவை வெளியிடுவதென்று தெரியாமல் திக்குமுக்காடுகிறது.

பொருளாதார வீழ்ச்சி, அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், தொழிற்சங்கப் போராட்டங்கள் மற்றும் அரசிற்கெதிரான சர்வதேச அழுத்தம் என நாடே ஒட்டுமொத்தக் குழப்பத்தில் மூழ்கியிருக்கிறது. இதிலிருந்து மீள வெளிநாட்டு உதவியைப் பெறலாம் என்று ஜனாதிபதி சந்திரிகா கணக்குப் பண்ணி, பொதுக்கட்டமைப்பை உருவாக்கும் முயற்சிக்கு தயாரானால், அதிலும் முட்டுக்கட்டை விழுந்திருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா வெளிநாட்டு நிதி கிடைக்கும் சந்தர்ப்பத்தை கைநழுவவிடாது அதனை உள்ளீர்ப்பதையே பிரதான நோக்காகக் கொண்டு அரசியல் காய்நகர்த்தலில் ஈடுபட்டிருப்பதனால், பங்காளிக்கட்சியினரை தமது பக்கம் இழுக்கும் உபாயத்தினை மேற்கொண்டிருக்கிறார். எனினும் அது சாத்தியப்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அரிதாகவே காணப்படுகின்றது.

இந்நிலையில் உதவிவழங்கும் நாடுகளை தாஜா பண்ணி உதவியை ஈர்ப்பதற்காக வெளிநாட்டு அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரை ஜனாதிபதி பயன்படுத்தி வாக்குறுதிகளை வெளிநாட்டில் வீசினார். எனினும் அதுவும் சாத்தியமானதாக அமையவில்லை.

இந்த வேளையில் பொதுக்கட்டமைப்பு உருவாக்கப்படுவதை இந்தியா விரும்பவில்லை எனத் தகவல்கள் கசிந்துள்ளன. தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டமைப்பு வளர்ச்சியைப் பார்த்து பாரததேசம் அச்சங்கொள்வதாக இராஜதந்திரத் தகவல்கள் கூறுகின்றன. பாரதத்தின் தேவையற்ற அச்சம் பொதுக் கட்டமைப்பு உருவாக்கத்திற்கு தடைபோட்டுள்ளதாகவும் இராஜதந்திரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்காரணமாக மேலும் மேலும் இறுக்கத்திற்குள் பொதுக்கட்டமைப்பு விவகாரம் சிக்கியிருக்கிறது. இந்த இறுக்க முடிச்சுக்கள் இப்போதைக்கு அவிழுமா என்பது கேள்விக்குறியே.

# அரசின் அனுமதி கிடைத்ததன் பின்னர் ஐ.தே.கவின் நிலைப்பாடு அறிவிக்கப்படும்

## -ரணில் விக்கிரமசிங்க



(கொழும்பு)

**பொதுக்கட்டமைப்புக்கு அரசாங்கத்தின் அனுமதி கிடைத்ததன் பின்னர் அதனை நன்கு ஆராய்ந்து ஐக்கிய தேசியக் கட்சியின் நிலைப்பாட்டை அறிவிப்பதாக எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.**

ஹக்மன தொகுதி ஐக்கிய தேசியக் கட்சியின் அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

சமாதானம் மற்றும் ஒன்றிணைந்த பொதுக் கட்டமைப்புக் குறித்து அரசாங்கம் பல்வேறு நிலைப்பாடுகளை தினமும் தெரிவிப்பதினாலேயே இந்தத் தீர்மானத்தை நாம் எடுத்துள்ளோம்.

சமாதானம், பொதுக் கட்டமைப்பு குறித்து ஐக்கிய தேசியக் கட்சி ஒரு நிலையான நிலைப்பாட்டில் இருக்கின்றது. ஆனால் அரசுதான் முரண்பட்ட நிலைகளில் உள்ளது.

எமது நிலையான நிலைப்பாட்டை உறுதிப்படுத்தி கடந்த ஆண்டு ஒக்டோபர் 8 ஆம் திகதி ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்துக்கு இதுவரை எந்தவித பதிலும் கிடைக்கவில்லை.

இந்நிலையில் நாம் பொதுக் கட்டமைப்பு தொடர்பில்பேச ஜனாதிபதி அழைக்கும் போது போவது புத்திசாலித்தனமானதல்ல.

இதனாலேயே ஜனாதிபதியின் அழைப்பை நாம் நிராகரித்தோம். அதேவேளை, ஜனாதிபதி தனது அதிகாரத்தைத் தக்கவைத்துக்கொள்வதற்காக மாத்திரம் செயற்படுவாரானால் சமாதான செயற்பாடுகளைப் பாதிக்கும் ஓர் சூழ்நிலையே ஏற்படும் என்றார்.

(ற-8)

# மின்சாரசபை மறுசீரமைப்பு தீர்மானம் உடனடியாக இரத்துச் செய்யப்பட வேண்டும்

## எச்சரிக்கிறது ஜே.வி.பி

மின்சாரசபையை மறுசீரமைப்பது தொடர்பான அமைச்சரவைத் தீர்மானத்தை உடனடியாக இரத்துச்செய்யாவிட்டால் கடுமையான அரசியல் நடவடிக்கைகளை எடுக்க நேரிடுமென ஜே.வி.பி எச்சரித்துள்ளது.

மின்சாரசபை போன்ற முக்கியத்துவம்வாய்ந்த அரச வளத்தை விற்க வழிகோலும் மறுசீரமைப்புக்கு இணங்க முடியாதென்று ஜனாதிபதிக்கு அனுப்பிவ்வைத்துள்ள கடிதத்தில் ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

எனினும், கடந்த முதலாம் திகதி நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம, மின்சாரசபை, பெற்றோலியக் கூட்டுத்தாபனங்களை இலாபமீட்டும் ஒன்றாக மாற்றுவதாயின் அவற்றை மறுசீரமைப்பதும் கட்டாயமாகுமெனக் கூறியிருந்தார்.

எவ்வாறாயினும் மின்சாரசபையை மறுசீரமைப்பதற்கான அமைச்சரவைப் பத்திரத்தை அடுத்த அமைச்சரவைக் கூட்டத்தின்போது அனைவரினதும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் விலக்கிக்கொள்வதாக பிரதமர் கூறியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ற-8)

# வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர்களுக்கு தொழில் உபகரணங்களை வழங்கி உதவுக!

## வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வேண்டுகோள்

(திருநெல்வேலி)

சுனாமியினால் பெரிதும் பாதிக்கப்பட்ட வடமராட்சி கிழக்குப் பகுதி கடற்றொழிலாளர்களுக்கு உரிய நிவாரணங்களை உடன்வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வடமராட்சி வடக்கு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இதுவிடயம் தொடர்பில் வேல்ட்விஷன் நிறுவனத்தின் இணைப்பாளரிடம் சமாசம் மகஜர் ஒன்றைக் கையளித்துள்ளது. இம் மகஜரின் பிரதிகள் யாழ். மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் மருதங்கேணி பிரதேச செயலாளர் ஆகியோருக்கும் பருத்தித்துறை சுனாமி செயலணிக்கும் கையளிக்கப்பட்டுள்ளன.

சமாசப் பொது முகாமையாளர் க. சூரியகுமரனின் கையொப்பத்துடன் கையளிக்கப்பட்ட இம் மகஜரின் விபரம் வருமாறு,

சுனாமிப் பேரலையால் கடற்றொழில் கிராமங்கள் அனைத்தும் பாதிக்கப்பட்டுள்ளது தாங்கள் அறிந்ததே.

வடமாரட்சி கிழக்கு மாமுனை தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பிரதேசங்கள் மிகவும் கூடுதலான இழப்பைக் கண்டுள்ளன.

1450 பேர் உயிரிழந்துள்ளதுடன், 2000 உறவுகள் காயமடைந்துள்ளன. வீடுகள் அனைத்தும் அழிந்துவிட்டன. தொழில் உபகரணங்கள் முற்றாக அழிந்துள்ளன. இவ்வளவு தாக்கத்தையும் தாங்கிய மக்களுக்கு இன்றுவரை தொழில் உபகரணங்கள் எதுவும் கிடைக்கவில்லை.

வடமராட்சி பிரதேசம் முழுவதும் தாங்கள் மட்டுமல்ல பல நிறுவனங்களும் தாராளமாக உதவிகளை வழங்கி இருககிறீர்கள். அதற்கு எமது மனப்பூர்வமான இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஒப்பீடு செய்யும் வகையில், வடமராட்சி கிழக்கு மக்களை பாவப்பட்ட மக்களாகத்தான் நான் பார்க்கின்றேன். காரணம் இன்றுவரை அவர்களுக்கு நன்கொடையாக என்ன உதவி வழங்கப்பட்டன. எனவேதான் தங்களை பணிவாக வேண்டுதல் செய்கின்றேன்.

வடமராட்சி கிழக்கு சமாசம் 14 சங்கங்களைக்கொண்ட ஒரு தாய்ச்சங்கமாகும். இம்மக்களுக்கு முதற்கட்டமாக 100 கட்டுமரங்களும், வலைகளும் வழங்கினால் தாங்களின் இந்த உதவியால் 100 குடும்பங்கள் நன்மைபெறும். இதில் எந்த அச்சமும் இல்லை. உடனடியாக அந்த மக்கள் தொழில் செய்யக்கூடியநிலை உருவாகும். எனவே இவ்வுதவியை தாங்கள் மனமுவந்து செய்துதருமாறு தாழ்மையாக கேட்டு நிற்கின்றேன் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-43)

# சமுர்த்தி அபிவிருத்தி திட்டத்திற்கென அரசு 50 கோடி ரூபாவை ஒதுக்கியது

(கொழும்பு)

சமுர்த்தி அபிவிருத்தி திட்டத்தின்கீழ் இந்த வருடம் பல புதிய திட்டங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இந்த திட்டங்கள் அடுத்த மாதம் தொடக்கம் அமுலுக்குவரும் என தெரிவிக்கப்படுகிறது. கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான பல திட்டங்கள் இந்த வருடத்தில் அமுல்செய்யப்படுமென்று சமுர்த்தி அமைச்சர் பவித்திரா வன்னியாராச்சி தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியினால் ஆரம்பித்துவைக்கப்பட்டுள்ள இந்த திட்டங்களுக்கென அரசாங்கம் 50 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது. இதேவேளை, சுனாமி அனர்த்தம் காரணமாக அம்பாறை மாவட்ட கரையோரப் பிரதேசங்களில் வீடுகளை இழந்தவர்களுக்கும், வீடுகள் சேதமடைந்தவர்களுக்கும் அரசாங்கத்தின் வீடமைப்பு மானிய கொடுப்பனவை வழங்கும் பணியில் ஈடுபட்டுள்ள அரச உத்தியோகத்தர்களில் சிலர், பாதிக்கப்பட்டவர்களிடம் இருந்து லஞ்சம்கோரி வருவதாக தெரிவிக்கப்படுகின்றன.

இது தொடர்பாக தற்போது விசாரணை செய்யப்படுவதாக கல்முனை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரும் சுனாமி வீடமைப்பு மீள்கட்டுமான இணைப்பாளருமான யு.எம்.ஏ.அசீஸ் தெரிவித்துள்ளார். (க-5)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

**ஒருவன் தன்னை மிகவும் சாமர்த்தியசாலியாகக் கருதுவது மூடத்தனமாகும். காகம் ஒருவிதத்தில் சாமர்த்தியசாலிதான். தான் சாமர்த்தியசாலி என்றும் அது நினைக்கலாம். ஆனால் மலத்தை உட்கொண்டு தான் அது பிழைக்கவேண்டியிருக்கிறது. அதுபோல் அறிவிலியானவன் உலகத்தைப் பற்றிய அறிவு தனக்கு இருக்கிறது என்று நினைத்து தன்னைத்தானே கெடுத்துக்கொள்கிறான். அவனுடைய திறமையெல்லாம் மிகவும் கேவலமான வஞ்சகம்தான்.**

சுவாமி விவேகானந்தர்

## புலிகள் - இராணுவம்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் தரப்பில் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன் மற்றும் சிவகுமார் ஆகியோர் பங்குபற்றினர். இராணுவத் தரப்பில் மாவட்டக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் பாலசூரிய உட்பட்டோர் கலந்துகொண்டனர்.

இச்சந்திப்பின்போது விடுதலைப் புலிகளின் காவலரண்மீது இடம்பெறும் தாக்குதல் குறித்துப் பேசப்பட்டது. கட்டைப்பறிச்சான் பகுதியிலிருந்து கருணா தரப்பே தாக்குதல்களை நடத்திவருவதாக எழிலன் குற்றஞ்சுமத்தியிருக்கின்றார்.

எனினும் இராணுவத் தரப்பு மறுத்திருக்கின்றது. இதேவேளை கட்டைப்பறிச்சான் ஊடாக கொண்டு செல்லப்படும் பொருட்களுக்கு கட்டுப்பாடு விதிக்கப்படுவது குறித்து படைத்தரப்பிடம் எழிலன் கேள்வி எழுப்பியபோது படைத் தலைமையகத்தின் கட்டமைப்புப்படியே இராணுவத் தரப்பு செயற்படுவதாக அவர்கள் தெரிவித்துள்ளனர். (ச-4)

## மக்களுக்கு...

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தைக் கட்டுப்படுத்துவதற்கு பொலிஸார் ஆகாயத்தை நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள நேரிட்டது. இச்சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் மூவரும், இராணுவத்தினர் ஐவரும் காயமடைந்து பொலநறுவை வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டனர்.

அப்பிரதேசத்தில் விசாரணைகளை மேற்கொண்டதில் ஒருவர் உயிரிழந்தமை தெரியவந்ததாக அவர் தெரிவித்தார். (ச-4)

## சந்திவெளித் தாக்குதல்....

இப்போராட்டம் இடம்பெற்றுக் கொண்டிருந்தவேளையில் காலை 9.30 மணியளவில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து, அமைதிவழிப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த மக்களை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததோடு, தடியடிப் பிரயோகத்தையும் மேற்கொண்டனர்.

இச்சம்பவத்தின் போது 71 வயதுடைய கந்தசாமி என்பவர் அவ்விடத்திலேயே கொல்லப்பட, பத்திரிகையாளர் ஒருவர், பாடசாலை மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட 16 பேர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இராணுவத்தின் இந்த வெறியாட்டத்தின்போது போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

மக்களின் அமைதிவழிப் போராட்டத்தை ஆயுதவழிகொண்டு தடுப்பதானது போர்நிறுத்த ஒப்பந்த விதிகளுக்கு முற்றிலும் முரணானது என்பதுடன், போர்நிறுத்த ஒப்பந்தத்தின் ஸ்திரத்தன்மைக்கும் பாதிப்பை ஏற்படுத்தும். தங்களது உரிமைகளை வென்றெடுப்பதற்கும், தமது எதிர்ப்பை வெளிப்படுத்துவற்கும் அமைதி வழிப் போராட்டங்களை நடாத்தும் உரிமை மக்களுக்குண்டு.

மூன்றுவருட சமாதான முயற்சிகளுக்கூடாக தங்கள்மீது திணிக்கப்பட்ட தடைகள், நெருக்குவாரங்கள் நீங்கி சொந்த வாழ்விடங்களில் நிம்மதியாகச் சென்று வாழலாம் என்று எதிர்பார்த்திருந்த மக்களிற்கு, தமது எதிர்பார்ப்புகள எதுவுமே நிறைவேறாதபோதும் இராணுவ அச்சுறுத்தல்களையும் நெருக்குவாரங்களையும் படைத்தரப்பு தீவிரப்படுத்தியிருப்பது மக்கள் மத்தியில் பேரச்சத்தையும், கொந்தளிப்பையுமே ஏற்படுத்தியுள்ளது.

இராணுவத்தினரின் புதிய கெடுபிடிகள், இராணுவ முகாம்கள் மற்றும் காவலரண்களை மக்கள் வாழ்விடங்களில் அமைப்பதற்கு எதிராக மக்கள் அமைதி வழியில் தமது எதிர்ப்பைக் காட்ட முனைந்தபோது மனிதாபிமானமற்ற முறையிலும், கொடூரமானமுறையிலும் அரச படைகள் மக்கள் மீது கண்மூடித்தனமான துப்பாக்கித் தாக்குதலை' மேற்கொண்டுள்ளன.

மக்களின் அமைதிவழிப் போராட்டத்தின் மீது இராணுவத்தினர் மேற்கொண்ட இத்தாக்குதலை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, இதுபோன்ற சம்பவங்கள் மக்களிடையே போர்நிறுத்த சூழல் குறித்த நம்பிக்கையைத் தளர்த்தி உணர்வு ரீதியான கொந்தளிப்புக்கும் வ்ழிவகுக்கும் என்பதோடு,

நிலைமைகள் மேலும் நெருக்குதலுக்கு உள்ளாகலாம் எனவும் அஞ்சுகிறோம் என அவ் வறிக்கையில் சூறிப்பிடப்பட்டுள்ளது. (ச-4)

## இந்திய...

இலங்கைக்கு விஜயம்செய்யவுள்ளதாக் முன்னர் அறிவித்திருந்தபோதும் அந்த விஜயம் பின்னர் காரணமின்றி பிற்போடப்பட்டது.

தற்போது இலங்கை வரவுள்ள இந்திய அமைச்சர் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருடன் முக்கிய பேச்சுக்களில் ஈடுபடுவார் என்று தெரிவிக்கப்படுகிறது. (ச-4)

## கருணாரட்ண...

பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பிரிகேடியர் தீபா லல்விஸ் முன்னர் யாழ்ப்பாண இராணுவத் தலைமையகத்தின் பிரதான பிராந்திய பிரதானியாகச் செயற்பட்டுவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-4)


மே 7 முதல்

பாடநூல் வெளியீட்டிலும் நாடளாவிய விற்பனை மேம்படுத்தலிலும் கொழும்பில் முன்னணி வகிக்கும் லங்கா புத்தகசாலை அனுசரணையுடன்

யாழ். பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தின்

மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும்

அனைத்துத் தரப்பினருக்கும் ஏற்ற உள்நாட்டு வெளிநாட்டு (ஆங்கில, தமிழ்) பாடநூல்களும், அகராதிகள், கவிதைகள், சிறுகதைகள், சமய இலக்கியங்கள், மருத்துவ நூல்கள் மற்றும் பல

இடம் : யாழ். பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்
காலம் : 2005 மே மாதம் 7 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை
நேரம் : காலை 9.00 மணிமுதல் மாலை 6.00 மணிவரை (புதியநேரம்)
(வார இறுதி நாட்களும், விடுமுறை நாட்களும் உட்பட)

சிறப்பு விலைக்கழிவு

தொடர்புகளுக்கு
தலைவர், வணிக மாணவர் மன்றம்,
யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம் (C-1354)


# மட்டக்களப்பில் இராணுவம் வெறியாட்டம்....

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது,

மட்டக்களப்பு சந்திவெளியில் புதிதாக அமைக்கப்பட்ட இராணுவச் சோதனைச் சாவடியை அகற்றக்கோரி அப்பகுதி மக்கள் நேற்றுக்காலை 9 மணிமுதல் மறியல் போராட்டம் ஒன்றில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அக்காவலரணைச் சூழவும் இராணுவத்தினர் பெருமளவில் குவிக்கப்பட்டதுடன் கலகமடக்கும் பொலிஸாரும் குவிக்கப்பட்டனர். இதன்போது இராணுவ உயரதிகாரிகளும் பிரசன்னமாக இருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

அங்கு கூடியிருந்த இராணுவ உயரதிகாரிகள் காலை 10.15 மணியளவில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்களை கலைந்து செல்லுமாறு கூறினர் என்றும், காவலரணை அகற்றும்வரை தாம் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக மக்கள் தெரிவித்தனர்.

இதனையடுத்து இராணுவத்தினருக்கும், மக்களுக்கும் இடையே வாக்குவாதம் இடம்பெற்றது. அதனைச் சந்தர்ப்பமாகப் பயன்படுத்திக்கொண்ட இராணுவத்தினரும், பொலிஸாரும் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டனர். இதன்போது ஆத்திரமடைந்த மக்கள் கற்களால் இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தினர்.

மக்களைக் கலைந்துசெல்லுமாறுகோரி இராணுவத்தினர் சரமாரியாக வானத்தை நோக்கி சுட்டவாறு அங்கிருந்த மக்கள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை மேற்கொண்டனர். இச்சம்பவத்தில் 71 வயதுடைய அப்பு கந்தசாமி என்ற வயோதிபர் துப்பாக்கிச் சூட்டுத் தாக்குதலுக்குள்ளாகி சம்பவ இடத்தில் பலியானார். பாடசாலை மாணவிகள், பத்திரிகையாளர் ஒருவர் உட்பட 20க்கு மேற்பட்டோர் படுகாயமடைந்த நிலையில் வாழைச்சேனை, ஏறாவூர் மற்றும் மட்டக்களப்பு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின்போது காயமடைந்தவர்களில் எட்டுக்கும் மேற்பட்டோர் துப்பாக்கிச்சூட்டுக் காயங்களுடனும், மற்றவர்கள் தடியடிப்பிரயோகத்தின்போதும் காயமடைந்துள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

இராணுவத்திற்கெதிரான இந்த போராட்டத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான எஸ்.ஜெயானந்தமூர்த்தி, பி.அரியநேந்திரன், ரி.கனகசபை மற்றும் தங்கேஸ்வரி கதிர்காமர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அத்துடன் மாவட்டக் கண்காணிப்புக்குழுவின் உயரதிகாரிகளும் அங்கு பிரசன்னமாயிருந்தனர். எனினும் அவர்களின் கோரிக்கைகள் எவையும் அங்கு கருத்தில்எடுபடவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

மக்கள் சார்பில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் பேச்சுவார்த்தையில் கலந்துகொண்டபோது, ஒரு கட்டத்தில் உங்களையும் சுட வேண்டும் என்று பொலிஸ் அதிகாரி குறிப்பிட்டதால் மேலும் மக்கள் ஆத்திரமடைந்த நிலையில் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-4,9)

## விபத்தில்....

வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கிளுடன் மோதியதிலேயே இவ்விபத்து இடம்பெற்றுள்ளது.

தலையில் பலத்த காயம் ஏற்பட்டதில் அவர் மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது. மரண விசாரணையின் பொருட்டு இவரது சடலம் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (19)

## யாழில் இன்று...

ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

இதற்கான ஏற்பாட்டை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் மேற்கொண்டுள்ளனர்.

தமிழ்மக்களுக்கு எதிராக இராணுவத்தினரால் கட்டவிழ்த்துவிடப்படும் அராஜகச் செயற்பாடுகளை முற்றாக நிறுத்துவதற்கு அனைத்து மக்களையும் ஒன்றிணையுமாறு கேட்கப்பட்டுள்ளது.

### வவுனியா

வவுனியா மாவட்டப் பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினால் இன்றைய ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அனைத்து உள்ளூர், வெளியூர் போக்குவரத்துச் சேவைகளையும் இடைநிறுத்தி அனைத்து வர்த்தக நிறுவனங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்களை மூடி ஆதரவு தருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ச)











எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்!

PI, PII, PIII மறுசீரமைக்கப்பட்ட கணனிகளின் புதிய வரவுகள்!

விரையுங்கள் NET காட்சியறைக்கு
குறைந்த கையிருப்பு மட்டுமே!

10.05.2005முதல் – 15.05.2005வரை
விசேட விற்பனை வாரம்

10.05.05 – 11.05.05 இத் திகதியில் கொள்வனவு செய்வோருக்கு 15% விலைக்கழிவும்!
12.05.05 – 13.05.05 இத் திகதியில் கொள்வனவு செய்வோருக்கு 10% விலைக்கழிவும்!
14.05.05 – 15.05.05 இத் திகதியில் கொள்வனவு செய்வோருக்கு 05% விலைக்கழிவும்
வழங்கப்படும்
என்பதனை மகிழ்வுடன் அறியத் தருகின்றோம்.

மேலும்,
Mobile Repairing & Un Locking Course
3 வது பிரிவு ஆரம்பம்!
பதிவுகளுக்கு முந்துங்கள்!

NORTH EAST TECHNOLOGIES (PVT) LTD
NO. 34, SADDANATHAR ROAD NALLUR, JAFFNA
021 - 2223786 & 0777 - 708498 (hot line)



நூற்றாண்டு நிறைவு 1904 – 2004
யா/ சாவகச்சேரி இந்துக் கல்லூரி
தேசிய பாடசாலை

நூற்றாண்டு நிறைவை குறிக்கும்
மாபெரும் கல்விக் கண்காட்சி

காலம்: 2005 மே 12ம், 13ம், 14ம் நாள்
இடம்: பாடசாலை வளாகம்

பாடசாலை மாணவர்களின் ஆக்கங்களுடன்
இக் கண்காட்சியை அணிசெய் நிறுவனங்களாக

⇨ யாழ்ப்பாண மின்னகத்தின் LG - அபான்ஸ் காட்சிக்கூடம்
⇨ அன்னை நாகா பூட்சிற்றியின் நில்கமால் - பிளாஸ்ரிக் தளபாடக் காட்சிக்கூடம்
⇨ குறிஞ்சி ஸ்தாபனத்தின் பஜாஜ் - மோட்டார் சைக்கிள் காட்சிக் கூடம்
⇨ IIS கணனி நிறுவனத்தின் காட்சிக் கூடம்
⇨ யாழ் CD - CITY இன் காட்சிக் கூடம்
⇨ இன்னும் பல காட்சிக் கூடங்கள் ⇦

இங்கு சிறப்புத் தள்ளுபடி விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்

சிறுவர்களுக்கு பெருவிருந்தாக
மெரிகோ ரவுண்ட்
பாதாளக் கிணற்றில் பயங்கர மோட்டார் சைக்கிள் சவாரி
மாயாஜாலக் காட்சிகள்
சிறுவர்களுக்கான உல்லாச ரயில் சவாரி


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல. 15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.05.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.